RECEIVED
1979-11-28
PERIODICALS
DIVISION
UNIVERSITY OF SRI LANKA * LIBRARY *

RECEIVED
1979-11-28
PERIODICALS
DIVISION
UNIVERSITY OF SRI LANKA - JAFFNA * LIBRARY *

ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து, தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொன்டது.

இதழ் 3 | சித்தார்த்தி வருஷம் புரட்டாதிமாதம் 26ம்திகதி வெள்ளிக்கிழமை [12-10-1979] | சுடர் 2

## திருவிடைமருதூர் சிவனும் அம்மையும்

### சம்பந்தர் சொல்வன

தோடொர் காதினன்
பாடுமறையினன்
காடு பேணிநின்று
ஆடுமருதனே.

திருவிடை மருதூரில் இருக்கும் கடவுள் தோடு ஒரு காதில் அணிந்தவன். வேதங்கள் என்றும் பாடுபவன். சுடுகாட்டை இருப்பிடமாகப் பேணி நின்று ஆடியருள்கின்றவன். அவன் தான் திருஇடைமருதூரன்.

கருதார்புரமெய்வர்
எருதேயினிதூர்வர்
மருதேயிடமாகும்
விருதாம்வினைதீர்ப்பே

தன்னை நினையாத அசுரது முப்புரம் எய்து கொள்வர். இடபத்தை விரும்பி இனிதாக ஏறி அமர்ந்து செல்வர்; மருதமரம் சிறந்த திருவிடைமருதே இடமாக இருந்து கொண்டவன்; எம்மை விட்டு நீங்காதபடி துன்புறுத்தும் வினை எல்லாம் அங்கிருந்து தீர்ப்பது அவன் செயல்.

எண்ணுமடியார்கள்
அண்ணன்மருதரைப்
பண்ணின்மொழிசொல்ல
விண்ணுந்தமதாமே.

எம்பெருமானை எண்ணுகின்ற அடியார்கள் எம் அண்ணலாகும் திரு இடைமருதூர் அப்பனைப் பண் இசைந்த பாடலால் போற்றிட இந்த வான உலகம் முழுவதும் அவரதே ஆகும்.

விரியார்சடைமேனி
எரியார்மருதரைத்
தரியாதேத்துவார்
பெரியாருலகிலே.

விரிந்த சடை உடையுடன் கொண்டு நெருப்புப் போன்ற மேனி உடனே திருஇடைமருதூரில் இருந்தவரை சதா மறவாது போற்றுவார் அவர் உலகிலே பெரியாராவர்,

பந்தவிடையேறும்
எந்தைமருதரைச்
சிந்தைசெய்பவர்
புந்திநல்லரே.



விரும்பும் அருள் உடைய இடபத்தை ஏறும் எந்தை பெருமானான திரு இடை மருதூரில் இருக்கும் கடவுளை தம்மனதில் சிந்தை செய்யும் அவர்களே புத்தி சாலிகள் எனப்படுவார்.

சுழலுஞ்சிலம்பார்க்கும்
எழிலார்மருதரைத்
தொழலேபேணுவார்க்
குழலும்வினைபோமே;

திருநடனமாடிடும் போது சுழல்கின்ற சிலம்புகள் ஓசைபடும் எழில் உடைய திரு இடைமருதூரில் இருக்கும் பெருமானைத் தொண்டு செய்து போற்றும் தொழிலாளர்கள் அவர்களை வருத்துகின்ற வினை ஓடிப்போகும்

பிறையார்சடையண்ணல்
மறையார்மருதரை
நிறையானினைபவர்
குறையாரின்பமே

பிறை விளங்கும் சடை உடைய மூர்த்தியாகி வேதங்கள் போற்றிட திருஇடைமருதூர் இருக்கும் பெருமானை தருமம் ஒழுக்கம் சீலம் ஆகும் நிறைவான நிலையால் போற்றுவார் ஒரு போதும் இன்பம் எய்தல் குறையார்கள்.

எடுத்தான்புயந்தன்னை
அடுத்தார்மருதரைத்
தொடுத்தார்மலர்சூட்ட
விடுத்தார்வேட்கையே.

திருக்கைலைமலையை எடுத்த இராவணனது தோளை நெரித்தருளிய திருஇடைமருதூர் பெருமானை நல்லமலர் எடுத்து நன்மாலை கட்டி சூட்டி வணங்குவார் தமது ஆசைகளை விடுத்துக்கொள்வார்

இருவர்க்கெரியாய
உருவமருதரைப்
பரவியேத்துவார்
மருவிவாழ்வரே.


பிரமா விட்டுணு என்னும் இரு கடவுளுக்கும் நாட அரிய சோதி நெருப்பாய உருவமுடைய திரு இடை மருதூர் ஈசரை போற்றித் துதிப்பார்கள் என்றும் அவருடன் பொருந்திவாழ்வார்கள்.

நின்றுண்சமண்தேரர்
என்றுமருதரை
அன்றியுரைசொல்ல
நன்றுமொழியாரே.

நின்று உணவு உண்ணும் சமணரும் புத்தரும் என்றும் எம் திருஇடை மருதூர்ப் பெருமானை நீக்கி விட்டு தமது பேதமையான போதனை வார்த்தை சொல்வாரே அன்றி ஒருநாளும் எம்பிரானை நன்றுமொழியார்கள்.


கருதுசம்பந்தன்
மருதரடிபாடிப்
பெரிதுந்தமிழ்சொல்லப்
பொருதவினைபோமே.

திரு இடை மருதூர் ஈசனையே கருதுகின்ற திருஞான சம்பந்தன் மருதரைத்தடி இருந்த அப்பனை ஆடிப்பாடிப் போற்றியாடிய பெரிதான இத்தமிழினை சொல்லிட உம்மை விட்டு நீங்காது பொருதி நிற்கும் வினைகள் யாவும் போகும்.



### மாணிக்கவாசகர் சொல்வன.

எந்தையென் தாய்சுற்றம் மற்றுமெல்லாம்
என்னுடைய
பந்தம் அறுத் தென்னை ஆண்டுகொண்ட
பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்
யாமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீங்குசிந்தையில்குடிகொள்ளாதஅந்தணர்கள் வழிபடும் திருநல்லூர்சிவன்

இப்படி ஒரு வார்த்தை சம்பந்தப் பெருமானால் பாடப் பெற்றுள்ள கீழே நாம் தந்துள்ள திருப்பதிகத்து காணப்படுகின்றது. திருநல்லூர் இறைவனை என் உயிர்க்குயிரை குருமணியை அன்பால் உணர்ந்து தெள்ளிய தேன் சொட்டும் செந்தமிழால் எம்பிரான் சம்பந்தர் மொழிகின்றார். இறைவனை நல்லூரில் இருக்கும் பெரிய ஆண்டவனை தமிழால் பாடிடும்போது தம்மையே செந்தமிழின் சம்பந்தர் என்கின்றார். ஆதலால் சைவத்தின் தரும நிலையும் உயர்வும் தமிழின் சிறப்பும் யாவும் சிறக்க வந்தருளிய எம்பிரான் சம்பந்தனை நம் உளமார வாழ்த்தி வணங்குகின்றேன் .

சைவத்தின் புண்ணியங்களை விளங்கியிராத எமக்குச் சம்பந்தர் வந்துதான் எமது ஆலயங்களின் புனிதத்தையும் மேன்மையையும் உலகறியச் செய்துபோனவர்: இது இன்று யார்க்கு விளங்கும்?, உண்மையில் பெரியபுராணம் உரையுடன் பதிப்பிக்கும்போது பெரியபுராணப் பாடலிற்குத் தந்த உரையுடன் சம்பந்தப்பெருமான் திருப்பதிகம் முழுவதையும் ஒருங்குசேரப் பதிப்பித்தேன். அந்த ஒரு செயலைச் சிலர் அப்படிச் செய்வதோ எனவும் கேட்டனர், ஆனால் இன்று அதைப் பதிப்பித்து சம்பந்தப்பெருமானுருடைய புராணத்தைத் தனித்த ஒரு புத்தகரூபமாக்கியதும் சைவநெறியில் இன்று எனக்கு ஒப்பாரும் மிக்காரும் இலாத விளக்கமுடைய ஒருவனாக என்னை அந்தப்பணி ஆக்கியது:

இதன்பயனாகவே 'சந்திரதீபம்' உதயமானது: சந்திரதீபம் சைவநெறியின் தூய்மையைக் காட்டுவது: அதற்கு வேறு நோக்கமில்லை: சில சாமிகள் சுருக்கவழியில் ஒளி காட்டுவதாக நம்பிய சில பெண்கள் அச்சாமியிடம் செல்வார்கள்: மானிப்பாயைச் சேர்ந்த மிக அழகிய பெண்கள் சிலர் நான் அறிய ஒளிகாட்டும் சாமியிடம் போனார்கள்: நல்ல அழகுடைய பெண்கள் ஒய்யாரமாக உடுத்துப்போனால் எவருடைய சிந்தையிலும் தீங்கு தன்பாட்டில் குடிபுகுந்துவிடும்: இந்தப் பெண்களில் சிலர் சாமியைத் தடவிக் கும்பிடுவாராம். அந்தச்சாமி எவ்வளவு குடுத்துவைத்தது என நான் நினைத்தேன்: ஏனென்றால் எனது பத்திரிகையும் பெயரளவில் ஒளி: தீபம் என்றால் ஒளி என்பது பொருள்: இந்த ஒளி சுருக்கவழியில் காணமுடியாது, அந்தச் சாமிகள் சுருக்கவழியில் ஒளியைக் காட்டட்டும்: நமக்கு அது இயலாது: நான்காட்டும் ஒளி எவ்வாறாயது என்றால்; இதோ நமது மக்களே இதை அறியுங்கள்: நமது சைவநெறி மிக மிக உயர்ந்தது: கூரிய அறிவும் ஒழுக்கமும் உடைய பெரியோரால் பேணப்பட்டது: ஆனதினால் பெரியோர் அவர்கள் வளர்த்துவைத்த சைவநெறியில் இருட்டில் கருமம் புரியும் அசுரத்தன்மை படைத்த பாவிகள்; அன்பும் அருளும் தருமமும் நிறைந்து அருள் ஒளி இயல்பில் நிறைந்த சமயத்தைப் பழுதாக்குகிறார்; என இருட்டில் ஒளியைக் காட்டுகின்றேன்,

தீங்கு இருள்தன்மையைக் கொண்டது: அருள் ஒளித்தன்மையை உடையது. ஆகையால் தீங்கினைக் காண்பித்து இவைகளை நீக்கிவிட்டு நீவிர் நடந்தால் உங்கட்கே நன்று என்று நட்புரிமையால் சொல்கின்றேன்: இதை விளங்குவார் மிகச் சிலராக இருப்பதைக்கண்டு வேதனைப்படினும் என்கடமையை நான் உறுதியுடன் செய்கின்றேன்.

திருமூலர் சொல் பிழைபடாது என்ற ஒரு நம்பிக்கை என் மனதில் ஆணித்தரமாகப் பதிந்துள்ளது. நந்தியெம்பெருமானுடைய மாணக்கர் அவர். அவர் வாக்கு தீதுபடாது. நமது பணி அவர்வழி. அவர்காட்டிய அறவழியில் அந்தணர் குலத்தை உயர்ந்திடும் நெறியில் நடந்திடப் பணி புரிவது முத்திக்கு உரிய வழியாகும் என்கின்றார்: இதை நாம் உணர்ந்தால் அந்தணர் உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டுமென நினைத்தால் முதற்கண் அவர் இன்று ஒழிகிவருகின்ற பழுதான நெறிகளைக் காண்பித்து இது உயர்ந்தோராய உங்களின் வழிஅல்ல என்று கபடமின்றிச் சொல்லல்வேண்டும்:

ஒருவரது தவற்றைச் சுட்டிக் காண்பிக்கும்போது அவருக்கு அது பிடிக்காது அவரிடம் பகை பெருகும்; இதை நாம் உணர்ந்துகொண்டுதான் சொல்கின்றோம். உலகரீதியிலும் சரி அருள்நிலையிலும் சரி தீங்கான செயல்கள் ஒருபோதும் நன்மை தராது. இது நாதாக்கள் மகத்துக்களது துணிவு. ஆதலினாலே எவராய் இருந்தாலும் தமது தீயநெறிகளை மாற்றிகொண்டால் அன்றி உண்மைக்கு உயரமுடியாது.

எல்லா மனிதருக்கும் நல்லதைத் தீயதை அளந்து உணரும் ஆற்றலை இறைவன் கொடுத்திருக்கிறார். ஆனால் அப்படி உணருகின்ற சக்திதான் பிறவிதோறும்செய்துவரும் பாவபுண்ணியத்தின் நிலையால் குறைந்தும் கூடியும் வருகின்றது. உதாரணமாகப் பாவமே புரிந்துவருவார் தொடர்ந்தும் தொடர்ந்தும் அதிலே லயித்துநிற்பர். ஈற்றில் அவருடைய முடிவு அதுவேயாகும். இதைக் கந்தபுராணத்துத் தக்கதொரு உறுதியின்மூலம் கச்சியப்பர் காட்டுகிறார்: கிரவுஞ்சன் என்னும் அசுரன் மலைவடிவாக நின்று பலருக்கும் தீமைபுரிந்தான். இந்தக் கிரவுஞ்சன் ஒருநாள் அகத்தியரிடம் சிக்கினான்: அவரிடம் அவன் மாயை பலிக்கவில்லை: உடன் என் சொன்னார் அகத்தியர் எனில் கிரவுஞ்சனே இன்னும் பலகாலம் இப்படி நீ துயர்புரிந்து முடிவில் எம்பிரானுடைய வேலால் இறப்பாய் எனச் சாபமிட்டார். அதன்படி பின்னர் நடந்தது.

கந்தபுராணம் எந்த ஆண்டு நடந்தது என்பதை ஆராயுமுன் அதன் உண்மை பொய்பற்றிச் சிந்திக்குமுன் இங்கு காட்டிய தத்துவத்தைச் சிந்திப்போம். அதுதான் தீங்குபுரிவார் திருந்தமாட்டாமல் தொடர்ந்தும் தீங்குகளைப் புரிந்தால் அவரின் முடிவு என்றோ ஒருநாள் தீதாக நிகழும்:

இதுமட்டன்றிக் கச்சியப்பர் இன்னுமொரு உண்மையைத் தெரிவிக்கின்றார்: அதுவும் யாதெனில் தீங்காக நடக்கின்ற தீவினையாளர் சிதைவாகிப் போகும் காலத்தில் அவருடன் சேர்ந்தாரும் கூடவே சிதைவாகுவர். நாம் ஒன்றுமட்டும் சொல்வோம்; உறுதியுடன் சொல்லோம்: இன்று கோவில்களில் ஒலிபெருக்கி வில்லிசை முதலிய பல பாதகங்களைச் செய்து செய்விக்கும் தீவினையாளர்கள் யாவரும் அழிந்தொழிந்து அந்தகாரமான இருளில் மூழ்குவது நிச்சயம்.

உலகில் வாழ்கின்ற எல்லா மக்களுக்கும் பொதுவான ஒரு இயல்பு உண்டு. அது என்னவெனில் கோபம் கொள்ளல் பொறாமை தான் என்ற அகந்தை நொட்டை சொல்லிச் சிரித்தல் வைதல் ஆள் இல்லா இடத்து அவரைப் பற்றி இழிவாகப் பேசல் இவையன்றி காமம் அவா இவற்றின் செறிவு. இதில் பெரியவர் என்றும் சிறியவர் என்றும் அதிகாரி என்றும் அடிமை என்றும் பணம் படைத்தவர் என்றும் ஏழை என்றும் இலாது எல்லாரிடத்தும் காணப்படும்.

பணம் படைத்தவரைப் பார்த்து பணம் இல்லாதவன் பொறாமைப்படுவான், அதே நேரம் பணம் இல்லாதவன் படுத்துத் தூங்கி எழ பணம் படைத்தவன் இங்கு பார் இவனுக்கென்ன உழைத்திட மனமும் இல்லை, வழியும் இல்லை ஆனால் என்னில் பொறாமைப் படுகின்றானே என பணமிலாதவன் பேரில் எரிச்சல் படுவான்.

சேவல் இன்னுமொரு சேவலுடன் போட்டியிடும். புலவர் அடுத்த புலவருடன் போட்டி, குருக்கள் அடுத்த குருக்களுடன் போட்டி. நாய் நாயுடன் போட்டி இப்படி இப்படி இவை எல்லாம் இயல்பில் பெருகுவன. இதுவன்றி ஒரு சால் தேர்தல் வந்துவிட்டால் ஐயோ சொல்லமுடியாதபடி போட்டியும் பூசலும் மேடையில் வல்லினம் மெல்லினம் என்ற வகை ஆணும் பெண்ணும் மகனும் தகப்பனும் தம்பியும் தமையனும் மச்சானும் மச்சாளுமாக எத்தனை எத்தனை வசைமாரிகள் புறங்கூறல்கள் புனைந்துரைகள் ஆசை வார்த்தைகள் இவை இடம் பெறும். இந்த நிலையில் தேர்தல் காலத்தில் நடைபெறும் அனியாயங்களைக் காணச் சகிக்காது இந்த ஊரை விட்டு எங்காகிலும் போய் இருந்தாலோ எனத் தோன்றும். இந்த தேர்தல் போட்டி தேர்தல் முடிந்தும் ஓயாது பின்னரும் பகை நீடிக்க வைக்கின்றது. தேர்தலில் சிலர் வென்றுவிட்டால் பின்னர் ஐந்தாறு நாளைக்கு அதுவும் சும்மா இருக்க இயலாது. வென்றவரின் ஆதரவாளர்களின் ஊர்வலங்கள் தோற்றவர் மனம் வேதனையடையும் வகை பல கோஷங்கள் தோற்றவரின் ஆதரவாளர் அயல் நின்று கூக்குரலிடல் இப்படியான பல சிறுமைச் செயல்கள் நடைபெறுவன. இத்தகைய போட்டி கொலை காமாதி குணங்கள் பொறாமை முதல் பலவும் தீது என்ற வகையாகக் கருதப்படும். இந்த தீது மிகப் பொல்லாத ஒரு நிலையை இத்தீதிற்கு உடைந்தையாயினர்க்கு வருவித்து விடும். இதில் நின்றும் எவரும் தப்ப முடியாது.

ஆதலினால் திருவருள் நிலையில் தம்மை வைத்துக் கொள்வார்கள் இத்தத்தீங்கினை தம்மிடத்து வருவியாது அல்லது இத்தீய மனப்பாங்கு கொள்ளும் வகையான ஒரு தன்மை தன்னிடத்து வளர்ந்து கொள்ளாதவாறு பார்த்திடல் அவசியம்.

இந்த தீதான எண்ணம் ஒருவர்க்கு எவ்வாறு உதயமாகாது போகும்? இதன் காரணம் என்ன என்பதே கேள்வி? இதற்காகத்தான் எமது முன்னோர் தமது வாழ்வில் இந்த தீமைக்கு காரணமாகுவது முதற்கண் குல ஒழுக்கம் வருவாய் சேர்க்கை உணவு உடை பேச்சு என இந்த வகையான பலவற்றின் செயல்களாவன என கண்டு கொண்டனர். ஆதலினாலே முதியோர் வாக்கியமாக குலத்தளவே ஆகும் குணம் அடுத்தது சேர்க்கை என பன்றியுடன் கூடிய கன்றும் மலம் தின்னும் என மொழிந்து இதே போன்றே உணவிலும் புலால் மறுத்தல் மூலம் தான் தெய்வத் தன்மை அடையலாம் என இன்ன வகையான பல வாக்கியங்களை கொலை களவு காமம் இவை வருதலின் காரண நிலைகள் பற்றி மொழிந்துள்ளனர்.

உதாரணமாக காம உணர்வு பெண் ஆண் என்ற இருபாலார்க்கும் பொதுவானது. ஆதலினால் இந்த உணர்வை கட்டுப்படுத்தல் தூய தொண்டினால் மட்டும் ஏற்படலாம் அன்றி வேறில்லை. அடுத்து உணவும் இதற்கு கட்டுப்பாட்டுடன் விதிக்கப்பட்டுள்ளது. உணவு தரப்பட்டால் அவசரமாக அதை உண்டல் அதிகமாக உண்டல் அல்லது தீய நடத்தை உடையாரால் சமைக்கப்பட்ட உணவு உண்டல் இவையாவும் தீய சிந்தைகளை தூண்டி விடற்கு ஏதுவாகின்றது.

சாந்தம் மன அமைதி இவற்றைப் பெறுதற்கு உண்ணும் உணவு மிகத் தூய்மை உடையதாக இருத்தல் அவசியம். அது மட்டுமில்லாது சேர்ந்து கொள்ளும் மக்கள் அவரும் நல்ல சிந்தை உடையராதல் வேண்டும். பொறாமை கோபம் வஞ்சனை பொய் சொல்லல் முதலிய பழுதுகளைப் புரிவாருடன் சேர்க்கை என்றுமே மனஅமைதி தராது. இது பெரியோர் துணிபு ஆதலினால் தீது சிந்தையில் குடி கொள்வதற்கு செயல் உணவு உடை தொழில் அத்தனையும் ஏதுவாக அமைதலால் தீங்கிலாத வகை எமது சிந்தையைப் பேணிட இவற்றில் ஒழுக்கம் அவசியம். சேரும் மக்களது தொழில் நிலைபற்றி சிந்தித்தல் அவசியம். இதனாலே வள்ளுவரும் பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்ற கெடும் என்றது மட்டுமல்லாது ஓதலின் நன்றே வேதியர்க்குஒழுக்கம் என ஔவை சொல்லினாள்.

அந்தணர் குலம் குல ஒழுக்கம் கெட்டவுடன் பிறகு அக்குடி எக்காரணம் கொண்டும் திருந்தாது. நாம் அறிய பல அந்தணர் குடும்பங்களில் தற்கொலை மிருத்து குடும்ப ஒழுக்கக்கேடு பல பலவும் நிகழ்கின்றன. இதன் காரணம் அந்த அந்த குடும்பங்களில் ஏற்பட்டுள்ள ஒழுக்கக் கேடாகும். ஒரு அந்தணர் ஒழுக்கமற்ற நிலையை பேண அவரைக் காணும் போது ஐயா உமது வழி பிழை என்று சொல்லிப்பார்த்தேன். அவர் எனக்கு பைத்தியம் என எண்ணி பின்னர் சிங்கப்பூர் போய் அங்கு சில நாள் ஐசுவரியமுடன் வாழ்ந்து பின்னர் ஒரு நாள் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இப்படி பல செயல் நடைபெற்றுள்ளன. உண்மையாக தீங்கான வழி ஒழுகும் அந்தணர் முடிவு தீதாகவே முடியும் ஆதலின் தீதில்லாத அந்தணர் போற்றும் ஆலயங்களே சிறந்த அருளை உடையனவாக இருக்கும் என்பதை கீழே தந்த இப்பதிக வாயிலாக உணருங்கள்.

ஆகவே அந்தணர் சிந்தையில் தீங்கு குடிகொள்வதாயின் அவர்கள் தயவு செய்து தமது பூசைக் கருமங்களை நீக்கிடலேநன்று. தீங்கு குடி கொண்ட சிந்தையால் கொலை களவு கள்ளுண்டல் காமஉணர்வு சண்டை பல நட்டா முட்டித்தனம் செய்யும் பிராமணர் கையால் திருநீறு வாங்கிடலே தோஷம் விளைக்கும் ஆதலினால் அந்தணர் ஒன்றில் நல்லவராக அமைதி சாந்தம் நிறைந்தவராக வரட்டும். இல்லாதிருந்தால் தன் சாதியை களைந்து மீனயாவரம் இறைச்சிக் [illegible]ட்டும். பிரசாரகர் இவர்க்குவிற்பனையாளராக வரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

பெண்ணமருந் திருமேனி யுடையீர் பிறங்கு சடைதாழப்
பண்ணமரும் நான்மறையே பாடியாடல் பயில்கின்றீர்
திண்ணமரும் பைம்பொழிலும் வயலுஞ்சூழ்ந்த திருநல்லூர்
மண்ணமருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

பெண் ஒரு புறமாக பொருந்த நின்ற திருமேனி உடைய கடவுளே எம்பெருமானே! ஒளியுடன் பரந்த உமது திருச்சடை தாழ்ந்திட பண் இசை இயல்பில் பொருந்திட நான்கு வேதங்களையும் பாடி ஆடலும் பயில்கின்றீர். திண்மை விளங்கிட நன்கு வளங்கொண்ட பசிய சோலையும் வயலும் சூழ்ந்த திருநல்லூர் என இப்பூமியில் அமர்ந்த கோயிலே உமது கோயிலாக மகிழ்ந்து தங்கிக் கொண்டீர். 1

அலைமல்கு தண்புனலும் பிறையுஞ்சூடி அங்கையில்
கொலைமல்கு வெண்மழுவும் அனலுமேந்துங் கொள்கையீர்
சிலைமல்கு வெங்கணையாற் புரமூன்றெரித்தீர் திருநல்லூர்
மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

அலைபெருகும் குளிர்ந்த கங்கை ஆறும் பிறையும் சூடிக்கொண்டு அழகிய திருக்கையில் கொலைவிளங்கும் வெண்நிறமுடைய மழுவாயுதமும் நெருப்பும் ஏந்து இன்ற கொள்கை உடையீர். வில்லில் மாட்டிய கொடிய அம்பால் முப்புரங்களையும் எரித்தருளினீர்: திருநல்லூரில் விளங்கும் மலையை ஒத்த கோயிலே நீர் உறைவதற்கு உரிய கோயிலாக மகிழ்ந்தருளினீர்;
கோயிலில்சுவாமியை நோக்கினால் மலைமேல் இருக்கும் தன்மைபோல் காணப்பெறும்: தரிசிக்கச் செல்லும் அடியார்கள் பலர் அப்படி சுவாமி இன்றும் காட்சி தருவார் எனக் கூறிட நாம் கேட்டதுண்டு: 2

குறைநிரம்பா வெண்மதியஞ் சூடிக்குளிர்புன் சடைதாழப்
பறைநவின்ற பாடலோ டாடல் பேணிப் பயில்கின்றீர்
சிறைநவின்ற தண்புனலுஞ் சூழ்ந்த திருநல்லூர்
மறைநவின்ற கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

தனது தேயும் குறைபாடு நிரம்பிடாத வெண்திங்கள் சூடியருளி குளிரும் கங்கை நீர் அணிந்த புரிபுன் சடை தாண்டிட மத்தளம் முதல் பல பறைகளும் இயலும் இசைக்குரிய பாடலோடு ஆடலும் பேணிப் புரிந்து பயின்று வருகின்றீர்; காப்பாக அணைகள் கொண்ட குளிர்ந்த நீருடன் விளங்கும் நீர் தேக்கங்கள் சூழப்பெற்ற திருநல்லூர் எனப்படுகின்ற வேதங்கள் புகல்கின்ற கோயிலே கோயிலாக நீர் மகிழ்ந்தீரே 3

கூனமரும் வெண்பிறையும் புனலுஞ் சூடுங் கொள்கையீர்
மானமரும் மென்விழியாள் பாகமாகும் மாண்பினீர்
தேனமரும் பைம்பொழிலின் வண்டுபாடுந் திருநல்லூர்
வானமருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

கூனல் பொருந்தும் வெண் பிறையும் கங்கை நீருமே சூடுகின்ற கொள்கை உடையீர்; மானிடத்துற்ற விழி போல மருண்ட பார்வை உடைய மெல்லிய விழி உடைய உமைஅம்மையார் ஒருபாகமாகின்ற மாண்பினை உடையீர். தேன் சொரியும் பசிய சோலையில் மொய்த்திடும் வண்டுகள் இசைபாடுகின்ற திருநல்லூரில் வான் [பொருந்த நின்ற கோயிலே] உமது கோயிலாக மகிழ்ந்து உறைகின்றீர்: 4

நிணங்கவரும் மூவிலையும் அனலுமேந்தி நெறிகுழலாள்
அணங்கமரும் பாடலோ டாடல்மேவும் அழகினீர்
திணங்கவரும் ஆடரவம் பிறையுஞ்சூடித் திருநல்லூர்
மணங்கமழுங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

பகைவருடைய ஊனத்தைக் கவருகின்ற மூன்று இலை போன்ற வடிவுடன் விளங்கிடும் சூலத்தையும் நெருப்பையும் திருக்கரத்து ஏந்தி நெறியான கூந்தலுடையவளும் பரவச நிலைக்கு நம்மை தூக்கி எடுக்கும் தெய்வமுமாகும் உமைஉமது ஒரு பாகமாக நின்றிட அவள் காண பாடலுடன் ஆடல் கொள்கின்ற நற்பண்பு உடையராயினீர்: தியக்கவரும் ஆடும் பாம்பும் பிறையும் நீர் சூடியருளி திருநல்லூரில் வாசனை கமழ்கின்ற கோயிலே உமது இருப்பிடமாக எம்பிரானே நீர் மகிழ்ந்து கொண்டீரே. 5

கார்மருவு பூங்கொன்றை சூடிக்கமழ்புன் சடைதாழ
வார்மருவு மென்முலையாள் பாகமாகும் மாண்பினீர்
தேர்மருவு நெடுவீதிக் கொடிகளாடுந் திருநல்லூர்
ஏர்மருவு கோயிலே கோயிலாக இருந்தீரே.

மேகம் படியும் படியாக உபர்ந்த கொன்றை மரத்தின் பூவினை மாலையாகச் சூடியருளிய புரிபுன் சடை தாழ்ந்து விளங்கிட; வார்பூட்டிய மென்முலை உடைய உமையம்மையார் ஒருபாகமாகும் மாண்பினை உடையீர்! தேர்கள் ஓடும் நெடு வீதிகளில் இருமருங்கும் நாட்டிய கொடிகள் ஆடுகின்ற திருநல்லூரில் அழகு இயல்பில் மருவிக் கொண்ட கோயிலே உமது கோயிலாக நீர் இருந்தருளினீர். 6

ஊன்தேயும் வெண்மழுவும் அனலுமேந்தி உமைகாண
மீன்தேயுந் திசைநிறைய வோங்கியாடும் வேடத்தீர்
தேன்தோயும் பைம்பொழிலின் வண்டுபாடுந் திருநல்லூர்
வான்தோயுங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

ஊனைத் தேயவைத்திடும் வெண்மை நிறமுடன்மினுங்கும் மழுவாயுதமும் நெருப்பும் ஏந்தி உமை அம்மையார் காணும் படியாக வெள்ளிகள் தோன்றித் தோன்றி மறையும் திசைகள் நிறைய ஓங்கி ஆடியருளுகின்ற வேடத்தை உடையீர். தேன்கள் சிறிது சிறிதாகச் சொட்டும் மலர்கள் நிறைந்த பசிய சோலையில் வண்டினம் மொய்த்துப் பாடிடும் திருநல்லூரில் வானைத் தொட ஓங்கிய கோயிலே உமது கோயிலாக இருந்து மகிழ்ந்து கொண்டீர். 7

காதமரும் வெண்குழையீர் கறுத்த அரக்கன் மலையெடுப்ப
மாதமரும் மென்மொழியாள் மறுகும்வண்ணங் கண்டுகந்தீர்
தீதமரா அந்தணர்கள் பரவியேத்துந் திருநல்லூர்
மாதமருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

## யோகசுவாமி சொல்வன

கடவுளை அடையவேண்டுமென்ற ஆசையொன்றே போதும். அதே உங்களை நல்ல வழியிலே செலுத்தி அக்கரை சேர்க்கும். அந்த ஆசையைப் போற்றி வளருங்கள்.

பூதசுத்தி ஆன்ம தரிசனம் மெல்ல மெல்ல வரட்டும்: பூவாகி பிஞ்சாகி முத்திப் பழுப்பது போல் அநுபவஞானம் படிப்படியாக வரட்டும்;

ஆத்திரப்படாதே அவசரப்படாதே அஞ்சாதே ஈற்றில் யாவும் வெற்றியாய் முடியும்.

செய்வன எல்லாம் செவ்வனே செய்யவும்: செய்தால் செம்மையாகச் செய்யவேண்டும், செம்மையாகச் செய்ய முடியாவிட்டால் செய்யவேண்டாம்;

பார்ப்பதெல்லாம் சிவமாகப் பார்; செய்வதெல்லாம் சிவதொண்டாகச் செய்; நான் எனது என்பதை விட்டுவிடு;

புத்தகப் படிப்பிற் காலத்தைக் கழிப்பதிலும் தன்னைத் தன்னால் அறிவதில் காலத்தைக் கழிப்பது நலம்,

முதலாவது நிட்காமிய கர்மம்; இரண்டாவது சாந்தம்; மூன்றாவது நிட்டை அல்லது சிவதொண்டு.

கொஞ்சக் கொஞ்ச நேரத்திற்கு (10 நிமிடம் போதும்) சும்மா இருக்கப்பழகு. மனத்தைக் தடுக்கத் தேவையில்லை; தடுத்தால் வேகம் சொள்ளும், எங்கே போகிறுயென்று கேட்டுக் கொண்டு இருக்கிற ஆசனத்தை விட்டு நீங்காது இருத்தல் வேண்டும். இந்தச் சாதனை முதிர முதிர உள்ளுக்குள்ளிருந்து என்ன செய்திகள் வருகின்றனவென்று கவனித்தல் வேண்டும் (ஆழ்ந்த மோனத்திலிருந்து வரும் செய்திகள்) அப்படிச் செய்திகள் வந்தால் அவற்றை மற்றவர்களுக்குச் சொல்லு; வராவிட்டால் வாயைப் பொத்து;

தவமென்றால் சோம்பற்தனமல்ல (நித்திரைகொள்ளுவதல்ல) எந்த நேரமும் விழிப்பு;

உலகப்பற்று ஐயம் நம்பிக்கைக் குறைவு என்னும் காற்று வெளிச்சத்தை அணையாதபடி பார்த்துக்கொள்.

ஆன்மா எந்த நேரமும் சும்மாதான் இருக்கிறது. அசைவு தேகத்திற்கும் மனத்திற்குந்தான்.

சும்மா இருக்கிற சூட்சம் நான், சும்மா இருக்கிற சூட்சம் நீ. சும்மா இருக்கிற சூட்சமே எல்லாம்.

கடவுள் உங்களுக்குள்ளே பூரணமாக நிறைந்திருக்கிறார்; வேறு ஒரு புதினமுமில்லை. குருவைப் பணிந்து கடைத்தேறு.

## தவத்தின் ஆற்றலும் துவக்கின் ஆற்றலும்

உலகில் பிறரை வெல்ல அல்லது பிறரை அடக்க மக்கள் அரசாங்கங்கள் பாவிப்பது துவக்கு: துவக்கு பீரங்கி குண்டு அணுக்குண்டு என்று இந்தவகை பல பல பயங்கர ஆயுதங்களைப் பாவித்தே மக்களில் சிலர் தலைமை பெற்று வாழ்கின்றனர்.

இவைகள் ஒரு உயிரை அப்படியே கொல்கின்றன அழிக்கின்றன. நாகளை சேதமாக்குகின்றன. பதைபதைத்து துடிதுடித்து எத்தனையோ உயிர்கள் மாண்டு மடிய அது கண்டு மகிழ்ந்து வெற்றி மாலை சூடி வீரம் பேசி பாராட்டுப் பாடல் பெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதில் பொருந்திய வெண்சங்கின் குண்டலம் உடைய பெருமானே கறுத்த உருவுடைய இராக்கதன் இராவணன் உமது இருப்பிடத்து மலையை தூக்கி எடுத்திட அந்த நேரம் உமது பெண்ணுக இங்கு இருந்த மெல்லிய மொழி பேசும் உமை அம்மை அச் செயல் கண்டு வேதனைப் பட்டு சோர்ந்திட அது கண்டு மகிழ்ந்து இராவணனை அவன் கொடுமை தீர திருவிரலால் நெரித்தீர். தீது எக்காலமும் தங்களிடம் குடி கொண்டிடாத அந்தணர்கள் போற்றித் துதித்திடும் திருநல்லூராகும் அம்பாளின் அருள் நிறைந்த திருக்கோயிலே கோயிலாக நீர் இடங்கொண்டீர்

திருநல்லூரில் அம்பாள் நித்திய கல்யாணியாக சர்வமங்களமுடையவளாக என்றும் அநுக்கிரகமுடையவளாக இருத்தலால் மாதமரும் கோயில் எனப்பட்டது: தீது குடி கொள்லாத அந்தணர் போற்றும்இடங்களில் நித்திய மங்கல நிறைவு காணப்பெறும்; ஓலிபெருக்கியில் மந்திரம் ஓதுவோர் ஊர்மக்கள் விரும்பிய படி நடப்போர் சண்டைசச்சரவுகளில் ஈடுபடுவோர் கோபங் கொள்வோர் வானொலி மின்சார லயிற் இவைகளில் ஈடுபடுவோர் யாவரும் வேத நெறிக்குரியவரல்லர். இவர்கள் யாவரும் தீமை குடிகொண்டவராகக் கருதப் படுவர். இவை உண்மை.

இந்த பாடலை உணர்ந்தால் ஒரு கோயிலில் தனித்த ஒருவர்க்குத் தான் பூசை உரிமை என்று சொல்ல முடியாது: தீதில்லாத வகை ஒழுகும் எந்த ஒரு அந்தணரும் அந்த அந்த தலத்துச் சென்று பூசை செய்யலாம். இதனை தீதமரா அந்தணர் என்று சொல்லாது தீதமரா அந்தணர்கள் என்றதால் பன்மை இங்கு குறிப்பிடப்பட்டு அதனுலே தீங்கிலாத வகையுடைய அந்தணர்கள் யாவரும் எந்தக் கோவிலிலும் போற்றிடும்உரிமை பேசப்படுகின்றது.

போதின்மேல் அயன் திருமால் போற்றியும்மைக் காணுது
நாதனே இவனென்று நயந்தேத்த மகிழ்ந்தளித்தீர்
தீதிலா அந்தணர்கள் தீமூன்றோம்புந் திருநல்லூர்
மாதராள் அவளொடு மன்னுகோயில் மகிழ்ந்தீரே.

தாமரைப் பூவின் மேல் இருக்கும் பிரமன் திருமால் போற்றி செய்து தேடி ஓடிக் காணுது பின்னர் ஓரிடத்து அமைதியுடன் இருந்து எங்கள் நாதன் இவன் தான் நாம் நாதாக்கள் அல்ல என்று தம்மிலும் மேலாகக் கருதிப் போற்றிட மகிழ்ந்து அவர்க்கு வரங் கொடுத்தீர்; தீது ஏதும் இல்லாத அந்தணர்கள் மூன்று அக்கினிகளை வளர்த்திடும் திருநல்லூரில் நித்திய கன்னிகையாகும் நாயகியுடன் என்றும் மங்கலம் தரும் அக்கோயிலில் மகிழ்ந்திருந்தீரே. 9

பொல்லாத சமணரொடு புறங்கூறுஞ் சாக்கியரொன்று
அல்லாதார் அறவுரைவிட்டு அடியார்கள் போற்றேவா
நல்லார்கள் அந்தணர்கள் நாளுமேத்துந் திருநல்லூர்
மல்லார்ந்த கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

பொல்லாத வஞ்சனை உடைய சமணருடன் ஆள் இல்லாத இடத்து புறங் கூறுகின்ற புத்தரும் இவர்கள் சத்தின் நிலை ஒன்றும் இல்லாதவர்கள்: இவர்கள் சொல்லும் அறவுரையை விடுத்த அடியார்கள் எஞ்ஞான்றும் போற்றுதல் குறையாததும் முற்றிலும் நல்லவரான அந்தணர்கள் நாளும் சென்று வழிபடும் திருநல்லூர் எனும் பூக்கள் நிறைந்த சிறப்புடைய அக்கோயிலையே உமது கோயிலாக மகிழ்ந்து கொண்டீர். 10

கொந்தணவும் பொழில் புடைசூழ் கொச்சைமேவு குலவேந்தன்
செந்தமிழின் சம்பந்தன் சிறைவண் புனல்சூழ் திருநல்லூர்ப்
பந்தணவு மெல்விரலாள் பங்கன்றன்னைப் பயில்பாடல்
சிந்தனையா லுரைசெய்வார் சிவலோகஞ் சேர்ந் திருப்பாரே

கொத்தாக மலரும் பூக்கள் நிறைந்த சோலை பக்கம் எல்லாம் திகழச் சூழ்ந்த சீகாழியில் வாழும் செந்தமிழின் சம்பந்தன் அணைகளிடத்தாக தேங்கியிருக்கும் குளங்கள் சூழ்ந்த திருநல்லூரில் தங்கி இருக்கும் பந்தாடும் மெல்விரல் உடைய பகவதி நித்திய மங்கலமுடைய உமையம்மை பாகராகும் பெரிய ஆண்டவனை உள்ளத்தால் உவந்து போற்றிய இப்பாடலை கருத்து உணர தம் சிந்தனையால் பாடிக் கொள்வார் சிவலோகஞ் சேர்ந்து இருப்பார்கள்.

செந்தமிழின் சம்பந்தன் என்றது தமிழ் சிறக்க வந்தருளியவர் என்பது குறிப்பு: பேதைத் தனமான பாடல்கள் அகநானூறு புறநானூறு முதலிய இலக்கியங்கள் இருந்தாலும் தமிழ் தனது உண்மை உயர்வைப் பெற்றது ஞானசம்பந்தருடைய திருப்பதிகங்களாலாகும்: அகநானூறு புறநானூறு முதலிய பாடல்கள் பொய்மைக்குரியவரைப் போற்றினவே அன்றி மெய்மைக்கு அன்று. கலிங்கத்துப் பரணி முதலியனவும் இவை போன்ற சிந்தாமணி முதலியனவும் தமிழ் நூலாக இருந்தும் வஞ்சனையின் கற்பனை மிக இருப்பதால் அவை நன்றல்லனவாயின: ஆதலினுல் தமிழ் என்றும் சிறந்தது ஞானசம்பந்தரினுல் என்றதால் தம்மைச் செந்தமிழின் சம்பந்தன் என்ருர்:

அடுத்து சிந்தனையால் உரை செய்வார் என்றது இப்பாடலில் சொல்லியவற்றை கருத்தில் உணர்ந்து சொல்வார்கள் என்றபடி: அதன் கருத்து யாவதோ எனில் சிவனது வடிவம் இப்பதிகமுழுமையும் பேசப்படுகின்றது: அவையாவன; பெண் ஒரு பாக முடையவன் வேதம் பாடியருள்கின்ருன் கொலைபுரியும் சூலம் தனது கையில் கொண்டிருக்கின்ருன்: நெருப்பு ஓர் கரத்து ஏந்திக் கொள்கின்ருன், கூனிய பிறையும் நீரும் சூடினுன் வாசம் கமழும் கொன்றை மலர் மாலை அணிந்த சடைதாழ்ந்துளது வானம் இக்குதிசை எங்கெல்லாம் தான் ஒருவனே யாக நிறைந்து நின்று ஆடியருள்கின்ருன் இராவணனை நெரித்தருளி அருள் செய்த கருணை உடையவன் பிரம விட்டுணுக்கள் உணர ஒண்ணுத காண ஒண்ணுத சோதியாய் நீண்டவன் பின்னர் அவர்கள் நயந்து நாளும் அவனை சிவலிங்க வடிவில் போற்றுவார்கள்: அத்துடன் தீது குடி கொள்ளாத அந்தணர் அவனை நாளும் நயந்து போற்றுகிருர்: இத்தன்மையால் அவனை உண்மையாகப் போற்றும் அந்தணரிடம் தீது குடி கொள்ளாது: தீது குடி கொண்டார் அவனைப் போற்றிப் பயனில்லை பலனில்லை என்ற இவையாவும் சிந்தனையில் கொண்டு உரைப்பார்எனலாகும்: இவைகள்தியானத்திற்குஉரியன. 11

றவர் அநேகம் உலகில் உண்டு. கொலை மூலம் பிற தேசங்களை கைப்பற்றிய வீரர்களைப் போற்றிய பல புலவர் உண்டு. புறநாநூறு முதல் பல நூல்கள் போர்படை வீரம் பாராட்டியன நம்மிடம் உண்டு.

இவர்கள் தமது பழி நீங்க கோயில் கும்பிட்டவர் கட்டியவர் உண்டு. இவர் போன கோயிலே புல் முளைத்த காடாக மாறியனவும் உண்டு.

இவை எல்லாம் முன்பு நடைபெற்றன அன்றி இன்றும் நடைபெறுவதை எம் கண்ணுல் நேரில் காண்கின்ருேம்.

தான் வாழ்வதற்காக கொலைக் கருவி பாவித்தவன் அவர்க்கு உடந்தையாயினுன் அவர்க்கீழ் சேவகம் செய்வார் யாவரும் தீவினையாளரே! இவரும் இவர் சந்ததியும் என்றும் உய்யாது என பெரியோர் உறுதியுடன் மொழிகின்றனர். தீது அமர்ந்த சிந்தை உடையார் என்றும் உண்மை காணுர்: அல்லது கடவுள் அருளும்பெருர்:

அப்படி இருப்ப பகை வந்தால் அதைத் தீர்ப்பதற்கு துவக்கு முதல் ஆயுதம் அன்றி வேறு என்ன வழி என்ருல் அதற்குத் தான் நமது பெரியோர்கள் தவம் பெரும் ஆற்றல் படைத்தது: என கண்டு கொண்டனர்;

துவக்கு அழிவால் பகையை நீக்கும். ஆனுல் தவம் உணர வைத்தலால் பகையை நீக்கும்: துவக்கு பகையை நீக்கினுலும் வாழ்வு தராது. ஆனுல் தவம் பகையை நீக்கி நல் வாழ்வுதரும்

இதனுலே தான் பகைவரை அழித்தலையும் சார்ந்த இன மக்களையும் விருத்தி செய்திட எண்ணின் தவமே செய்ய நினை என்ருர் வள்ளுவர்.

சந்திர தீபம் இதனையே சொல்கின்றது. நாம் தவம் செய்வோம்: தமிழினம் இன்று அல்லல் பட்டு இருக்கிறது,

இனப்பகை குரோதம் அடிமைத்தனை முதல் பல சீர்கேடுகளால் தமிழினம் தடுமாறுகின்றது; இவர்கள் தடுமாற்றத்தை இன்னம் இன்னம் தமது சுயநல ஏமாற்றினுல் அரசியல்காரர்கள் இன்னமும் இன்னமும் தாழ்த்திக் கொண்டே போகிருர்கள்: தமிழர் கூட்டணியோ தமிழ் காங்கிரசோ இவர் யாவும் இதுகாறும் எவரேனும் தவத்தின் வழியில் இல்லவே இல்லை, பேசுவது ஒன்று செய்வது இன்னென்ருன கபடமே மிகுந்தனர்: மேடையில் வீர கர்ச்சனை மூலம் தமிழினத்தை வாழவைப்போம் என்றனர். அதற்கு சாத்வீகப் போராட்டம் என்றனர். சாத்வீகம் என்ற பேரால் நாட்டில் குரோதத்தையும் பகைமையையுமே பெருக்கி நிற்கின்றனர்:

இவைகள் ஒரு போதும் சாத்வீகமாகாது. இது தவத்தின் வழியல்ல, தவத்தின் வழி உண்மை அன்பு அகிம்சை இவையாகும். இது எந்த ஒரு அரசியல் வாதியில் காணலாகும்,

## தூய மனத்தால் அன்றி கடவுளை யாரும் அறியமுடியாது!

இவ்வாறு இயமன் நாச்சிகேதனிடம் தெரிவிக்கிருன். உலகில் ஓர் மனிதப்பிறவி பெறல் அரிது. அதனிலும் அரிது பெற்ற பிறவியில் மனத் தூய்மை பெறல். வானளாவிய கோபுரம் கட்டி கும்பாபிஷேகம் செய்வதிலும் மனத்தூய்மையுடன் வாழ்வார்க்கு எல்லா நலனும் கிட்டும்.

இதைத் தான் தீது அமரா அந்தணர் என மனத்தில் தீங்கிலாத தூய்மை உடையவரின் சிறப்பு பற்றி சம்பந்தர் தெரிவிக்கின்ருர்.இதை இன்று கும்பாபிஷேகம் செய்யப் போகும் குருக்கள்மார் எல்லாரும் உணர வேண்டும்.

மனத்தூய்மை உடையவர் எப்படி நடப்பர். என்ன செய்வர், என்ன பேசுவர். என்றதெல்லாம் நாம் சொல்ல வேண்டியதில்லை. சமீப காலங்களில் நடந்த பல கும்பாபிஷேகங்களில் மனத்தூய்மையற்ற செயல்கள் எங்கும் நடை பெற்றதை நாம் அறிவோம்.அந்தணர்க்குள்அந்தணர் குந்தகம்,வஞ்சனை,ஆதிக்கவெறி என்றெல்லாம் நடைபெற்றுள்ளதை நாம் அவதானித்தவை,நிறையஉண்டு.

இன்றைய பல குருக்கள்மாருக்கு ஆர் என்ன சொன்னுலும் தனது முறை சரி என்பதற்கு எத்தனை பொய் எத்தனை உருட்டு பிரட்டு .இவ்வளவும் செய்ய சொல்ல சித்தமாகின்றனர். இது மட்டன்றி உடல் தீங்கு செய்யவும் தயார். அதுவுமன்றி தங்கள் பிழையை நீதியாக காட்டினுல் அவன் விசரனை விட்டு அவன் பைத்தியகாரனை விட்டு; அவன் அப்படித் தான் குறுக்குவழி அவன்றை பேச்சைக் கேட்டு ஆர் இந்தக் காலம் கருமம் செய்யலாம்; நாங்கள் பட்டினி அல்லோ அப்படியெனின் கிடக்க வேண்டும். இப்படி இப்படி எத்தனையோ வஞ்ச மொழிகள் பேசி தம் பிழையை இன்னமும் பெருக்குவார். இவர்கள் வியாகரணம் நியாகரணம் சிரோன்மணி பூஷணம் முதல் பலபெரும் விலாசப் பெயர் வைத்து இருப்பார்கள் ஆனுல் அந்தக்கரண சுத்தி உடையரோ என்ருல் அதுதான் இராது.

தீக்கோழி தலையை மணலுக்குள் வைத்தால் தன்னை உலகர் காணுர் என்ற வகை போல் கடந்த பல ஆண்டுகளாக பல பல கும்பாபிஷேகங்களில் கோயில் கிரியைகளில் தமது வேத ஒழுக்கங்களில் அந்தணர்கள் எத்தகைய நிலையை தாம் வருவித்துக் கொண்டனர் என்பதை பல தூய வாழ்வுடைய பெரியோர் உணர்வர். அவர் யாரும் இவர் எதையும் செய்யட்டும் நாம் சொன்னுல் இவர் கேட்பாரோ திருந்துவாரோ என்ற வகை மௌனம் சாதித்துள்ளனர்.

மனத்தூய்மை உடையவர்க்கு கும்பாபிஷேகங்களில் நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோள் என்ற பிரச்சனையே ஏழாது. மனத்தூய்மை உடையார் தன்னில் தவறு காண்பாரின் பேதமை பற்றி சிந்தியார் அல்லது பதில் வீம்பிற்கு விருதிற்கு கருமம் செய்யார். மனத்தூய்மை உடையார் எப்பொழுதும் தம் தவறுகளை உணர்ந்து நீதி வழி சென்றிட எத்தனிப்பார். வஞ்சனை குரோதம் எக்காலமும் அவரில் ஏழாது.

இதனை நாம் இங்கு குறிப்பிடுவது நமது கோயில் கும்பாபிஷேகங்களில் பிரதம குரு தொடக்கம் கும்பாபிஷேகத்தில் பங்குகொண்டு நிர்வகிக்கும் அனைவரும் மனத்தூய்மை உடையராக அமைந்தால் தான் கோயிலில் அருள் வரும் என்பது காட்டிடவே குறிப்பிட்டோம் என்பதை உணர்க.

கீழே உள்ள கதா உபநிடத வாக்கியங்களை உணர்ந்தால் நாம் காட்டும் உண்மை புலப்படும்.

## கதா உபநிடதம் (2)ம் பகுதி

2. குழந்தைகள் வெளி இன்பங்களில் அதிகம் அக்கறை கொள்வார். அந்த வழியில் அவர் சென்று சென்று வெளி பந்தங்களில் பரந்த ஒரு நிலையில் மரணத்தில் சிக்குவார். இதே போன்று அடக்கமிலாத வாழ்வுடைய சீவன்களும் தங்கள் புறத்து இன்பப் பெருக்கங்களில் ஆசைப்பட்டு முடிவில் மரணவலையில் சிக்குவார். ஆனால் அமைதியை விரும்பும் சீவன்கள் உலகில் புற இன்பங்களால் வரப்படும் துயரங்களை உணர்ந்து அவை பயனில்லை எனத் தெரிந்து அழிவற்றதாய் அசைக்க முடியாததாகும் மெய்ப்பொருளை மட்டும் விரும்பி இந்த உலக இன்பங்களில் எதனையும் விரும்பமாட்டார்

இதன் தார்ப்பரியத்தை ''பொய் இலாத மெய் நெறிக்கே தக்கிருந்தார்'' என சம்பந்தசுவாமியினது பதிகம் ஒன்றில் காண்க.

3. ஆன்மாவின் மூலமே ஒருவர் ஒரு வடிவை சுவையை மணத்தை சத்தை தொடும் உணர்வை சிற்றின்ப சுகங்களை அடைகின்றார். ஆன்மா அல்லாது உடம்பில் வேறு ஒரு பொருளுக்கும் எதையும் உணரும் சக்தி இல்லை ஆனதினால் ஆன்மாவினால் உணரப்பட முடியாத காரியம் ஏதும் உண்டா இது இல்லவே இல்லை. அது அப்படி உள்ள காரியம்;

நாம் உடம்பன்று என பெரியோர் கூறும் துணிபு இதுவாகும். நமது உடம்பு உயிர் நீங்கிய பின் உணரும் சக்தி இல்லை. ஆனதினால் உணர்தல் ஆன்மாவிற்கே உரியது என்றவாறு. சினத்தை நீக்கி சித்தத்தை ஒருமைப்படுத்தினார்க்கு இது தெரியப்படும் என்பதால் அது அப்படி உள்ள காரியம் எனப்பட்டது. இது சொல்லிக்காட்ட முடியாதபடி தாம் தாம் உணரும் தன்மை உடையது. இங்கு பெருமை சிறுமை யாவும் இல்லை.

புலன்களால் பொழுது போக்காது வேளைக்கே இதை உணர கண்களை மூடித் தியானம் செய்யப் பழக வேண்டும். இந்த தியான நிலை எல்லாப் பந்த பாசங்களையும் இழந்துள்ள பெரியோர்க்கே கை கூடிடும்.

தந்தை தாய் மைந்தர் தமர் தாரம் என்று இவை யாவன பந்தங்களில் ஈடுபட்டு பாடுபட்டு பொருள் தேடி வீடுகட்டி ஓடியாடி ஆடல் பாடல் பேணுவார்க்கு இது ஒருபோதும் கை கூடாது. எல்லாவற்றையும் நீக்கி பசித்தால் ஒரு பிச்சை சோறு உண்டு அது எதுவாயினும் அங்கலாய்ப்பின்றி உண்ணலாம் என்றவர்க்கும்; ஆகவனீயம் காருகபத்தியம் தக்கிணாக்கினியம் என மூவகை அக்கினிகளையும் நித்தலும் ஓம்பிவரும் அந்தணர்க்கும் இதுதெளிவு பெறக்கூடும்.

4. ஆத்மாவின் மூலமாகவே ஒருவர் எல்லாப் பொருள்களையும் கனவிலும் விழிப்பு நிலையிலும் காண்கின்றார்: இந்த உணர்வால் எல்லாவற்றையும் அடக்கி ஆண்டு கொண்டிருக்கும் இந்த ஆத்மாவை அமைதி உடைய ஞானிகள் உணர்ந்து கொண்டு எக்காலமும் ஏதுவரினும் சஞ்சலம்டையார்கள்:

இந்த உணர்வில்தான் ஒரு பொல்லாப்புமில்லை எப்பவோ இவை முடிவானது அது நாம் அறிய முடியாதது ஆனால் என்றும் அதுவே உண்மை என முன்னைப்பெரியோர் உரைத்துப் போயினர்:

5. தானே ஆன்மா என்ற தன்னந்தனியான பொருளை; தன்னில் தனித்ததை; செய்யும் செயலின் நன்மை தீமையை உணர்வதை; அதன் பேறுபயலன்களை தான் அநுபவிப்பதை; கடவுளானதை; முன்புள்ளதாய் பின்னுக்கும் பின்னானதை அளக்க முடியாததை; உணர்ந்து கொண்டவர் மற்றவரிடமிருந்து தன்னை ஒளித்துக் கொள்ளார்: அது அதுவேயாகி அப்படி உள்ள காரியமாகின்றது.

செய்த செயலின் பயனாக ஆன்மா மாறுதலில் தாம் தாம் செய்யும் வினைகளின் பயனை ஒருவர் தானே தன்னில் வருவித்துக் கொள்கிறார் என்ற பெரியோர் வாக்கு உண்மையாகின்றது. இதனால் தீதும் நன்றும் பிறர்தரவாரா என்பதுமாகின்றது.

தானே தனக்கு நல்வினையும் தானே தனக்கு சுற்றமும் தானே தனக்கு யாவுமாம் என மாணிக்கவாசகர் கூறினார். ஒருவரை கொலை செய்தால் அல்லது தனது மனைவியன்றி ஏனைய பெண்ணை கற்பழித்தால் களவு எடுத்தால் பொய் சொன்னால் பொருமைப்பட்டால் பெரும் பேராசைப்பட்டால் கோபித்தால் இவை இவை யாவும் சென்று தனது ஆன்மாவை பந்தித்துக் கொள்ளும்: இதன் பயனை பின்னர் ஒரு பிறப்பிலோ அல்லது இப்பிறப்பில் சில நாள் கழித்தோ செய்து கொண்ட கொடுமைக்கேற்றபடி நமது உயிர் நமக்குத் தண்டனையை தானாகத் தேடித்தரும்.

இதனை உணர்ந்த வள்ளுவர் ''பிறன் நோவது எவன்'' என நமக்கு பிறர் துயரம் செய்தால் பிறரை ஏன் துயரப்படுத்துவான் அல்லது நோவான் என்றார்.

யோகசுவாமிகளும் அழுக்காறு அவா வெகுளி ஆன்மாவைப் பந்திக்கும் என்கிறார். இவைகளை மேற்குறித்தவற்றுடன் ஒப்பநோக்க.

6. எல்லாவற்றிற்கும் முன்னாக உற்பவித்த கருவை உணர்பவன் நிச்சயமாக கடவுளை ஆன்மாவை உணர்கின்றான். முதற்கருத்தான் எல்லாவற்றையும் கற்பனையால் கற்பித்து வருவித்தது. இது நீர் தோன்றதற்கு முன்னானது. இது எல்லா பூதங்களுடனும் (மண் நீர் நெருப்பு காற்று ஆகாசம்) உடன் உறைவது. அதுவே இருதய குகைக்குள் இருப்பது. அதுவே ஆத்மா அப்படியான பொருள் சிவன் என நாச்சிகேதனே உணர்.

அகல நீளம் யாராலும் அளப்பரிய அரிய மோனத்தின்சுகநிலைஇது முன்னர்க்கும் முன்னான மூலகருவே இரண்ய கர்ப்பம் எனப்படும்: இதனையே முதலாகக் கொண்டு அந்தணர் சங்கற்பம் செய்வதை உணர்க.

7. ஆதித்தியை உணரும் ஒருவன் பிரமத்தை அறிவான். ஆதித்தியே எல்லா கடவுள்களுக்கும் உயிராவது. அதுவே பிராணன்என்னும் வடிவில் முன் பிறந்தது. அதுவே நிலம் நீர் நெருப்பு காற்று வானம் எனும் பூதங்களுடன் முன் பிறந்தது: அதுவே இருதயத்தின் குகைக்குள் இருப்பது. என்றும் அது அங்கிருக்கும்: அது அதுவேயாகும். இவை யாவும் அதுவான பிரமமே அப்படி உள்ள காரியம்;

ஆதித்தியின் வழியில் ஆதித்தன் என்னும் சூரியன் தோன்றியவர். இதற்காக இன்றும் சிரார்த்தங்களில் சூரியனை சாட்சியாக வைத்து வழிபாடுகளை அவர் பொருட்டு ஏற்கும்படி வேண்டுதல் புரிவதாகும்?

8. நெருப்பு அதனை உண்டாக்கும் இரண்டு தீக்கடை கோல்களின் உள்ளாக உண்டு. நன்கு அந்த நெருப்பு அத் தீக்கடை கோலில் விறகால் மூடப்பட்டு உள்ளாக இருக்கின்றது. இது எப்படி எனில் ஓர் தாய் வயிற்றில் இருக்கும்கருப் போல் வெளித் தோன்றாதபடி உள்ளாக உண்டு. அந்த நெருப்பே நாள்தோறும் விழிப்புடைய மக்களால் வழிபட்டு வருகின்றது. அதுவே சிவமாகி அந்த நெருப்பில் எல்லாப் பொருளின் ஆகுதிகளும் நடைபெறுவன. இதுவேகடவுள் இது உண்மையில் அப்படி உள்ள காரியம்?

விறகில் தீயினன் என்று தமது தேவாரத்தில் எம்பிரான் அப்பர் மேற்கூறிய இதனை நன்கு காட்டி உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றால் முறுக வாங்கிக் கடையமுன்னிற்கும் என்கின்றமை காண்க.

9. எப்பொழுது சூரியன் உதயமாகின்றது: எப்பொழுது எங்கு அதுபோய் மறைகின்றது: எப்பொருள் இடத்தாக எல்லாத் தேவர்களும் தங்கி நிற்கிறார்கள். எவரிடத்திருந்து தப்பி எல்லாக் கடவுளரும் மேல்போக முடியாது அதுவே சிவம் என்றஅதுவாகும்: அது அப்படியான காரியம்.

காணப்படும் பொருள் எல்லாம் காணுகின்ற அப்பொருளில் அடங்கியதே அன்றி காண்பது காணப்படாது என்றும் உள்ளது. அது பன்மையில் ஒருமையானது, எல்லா ஒளி உடைய தேவரும் அங்கு உதிப்பவர் அதனிடம் பின்னர் ஒடுங்குபவர். அதைத்தாண்டி தாம் மேல் போக முடியாது என்றவாறு. சூரியன் உதிப்பதும் அதிலே பின்னர் ஒடுங்குவதும் அல்லது மறைவதும் அதில் என்றவாறு: அதுஆர்க்கும் எட்டொணாது என்றபடி.

சுருதியூடு சேளாது சரியையாளர்காணார்கள் துரியத்தின் நிலையிலும் (எல்லாம் மறந்திருப்பது) அது சாராது எவராலும் தொட முடியாது ஏதும் மயக்கம் அங்கு இல்லைஆனால் குறைவிலா நிறைவாகும் சுகக் கடல் அது ஒன்று: அதை இன்னொருவர்க்கு தெளிவுபடுத்துதல் அரிதாததலின் அதை அப்படி உள்ளகாரியம் என்றனர்:

10. இங்கு எது உண்டோ அங்கும் அது உண்டு: அங்கு எது உண்டோ அதே தன்மையானது தான் இங்கும் உண்டு: அப்படி அல்லாது அங்கு வேறு இங்கு வேறு என்று காண மூற்படுவான் திரும்பத் திரும்ப மரணத்தில் சிக்குவான்

அங்கும் இங்கும் வேறாய அப்படி ஒன்றும் இல்லை. போக்கும் வரவும் புணர்வும் இல்லாப் புண்ணியனே எனக் கூறுகிறார் மாணிக்கவாசகர் பின்னர் தொடர்ந்து உண்மை கண்ட பிற்பாடு துன்பம் பிறப்பு இறப்பு இவையாவன அனைத்தும் நீக்கிட இந்த உணர்வால் வழி தந்த குருமணியே என்கின்றார்.

11. தூய மனதால்மட்டுமே கடவுளை பிரமத்தை உணரலாம். அப்படியாயின் எவராகுதல் அதனிடத்து எந்த விதமான பெருக்கத்தைக் காணமாட்டான். அப்படிக் காண்பவன் மரணத்தின் பின் மரணத்துள் சிக்குகின்றான். இது அப்படியான காரியப் பொருள்.

ஒன்றென்ப ஒன்றே காண் என அதனிடத்து ஏதும் பிரிவோ பெருக்கமோ இல்லை என்பதை பெரியோர் தெளிவுபடுத்துகின்றனர்:

மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே என மாணிக்கவாசகர் கூறுவதால் தூய மனத்தால் அன்றி வஞ்சக மனத்தால் அழுக்குடைய மனதால் சிவனை உணர முடியாது;

12. புருடன் (ஆன்மா) பெருவிரலின் அளவானது. அதுவே உடம்பில் இருக்கிறது, அதுவே மூன்பு த்றகாலம் வருங்காலம் எல்லாவற்றிற்கும் உரிய கடவுளாகும். அந்த பரம்பொருளை சிவனை உணர்ந்த பின் தான் அதுவே என தேறுவதன்றி தன்னை அதில் நின்றும் பிரித்தறியவோ அல்லது மறைக்கவோ இனி எக்காலமும் முடியாது. இது அப்படியான காரியம்.

நின் ஆவார் பிறர் இன்றி நீயே ஆனாய் என்ற அப்பர்தேவாரம் இங்கு இதற்கு சாட்சி.

13. புருடன் பெருவிரலின் அளவாயது, எப்படி எனில்புகையில்லாத நெருப்பின் சுடர் போல்வது? அதுவே முன்னர் பழம் பொருட்கு உற்ற கடவுள் பின்னாக வருவனவற்றிற்கும் உரிய கடவுள்: அவர் இன்றும் நாளையும் ஓரேமாதிரியானவர்: இது அப்படியான காரியம்.

14. மலை மேல் பெய்யும் மழை நீர் நாற்புறமும் வழிந்தோடி கல்லில் மேட்டில் மடுவில் அருவியில் சுனையில் ஆற்றில் எல்லாவிடமும் சொரிதல் போன்று பிரமத்தில் வேறாய தன்மை காண்பவன் பல பல வடிவையும் காணும்போது ஒன்று தான் பல்வேறு வடிவம் எனக் காண்கின்றான்.

15. தூய நீர் தூய நீருடன் ஊற்றப் பெற்றால் தூய நீராகுதல் போன்று ஓநாச்சிகேதனே! உண்மை உணர்ந்து தெளிந்த தூய சித்தை உடைய முனிவனுடைய உள்ளம் பிரமத்துடன் ஒன்றேயாகின்றது.

இதனால் அழுக்குடையமனம் அவாஉடைய மனம் உலகப்பற்றுடைய மனம் என்றும் உண்மைக்கு வராது என்பது தெளிய வேண்டும். இதனாலே நல்லூர் இருக்கும் கடவுளை போற்றும் சம்பந்தர் தீது அமரா அந்தணர் நாளும் வழிபட்டு ஏத்தும் திருநல்லூர் என மொழிவதை உணருங்கள்.

## சிவத்துரோகம்

''எல்லாப் பாவங்களுக்கும் வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் பரிகாரம் சொல்லப்பட்டிருப்பதாகச் சிறந்த முனிவர்களால் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் சிவத்துரோகத்துக்குப் பிராயச்சித்தம் கூறப்படவில்லை என்று ஆன்றோர்கள் கூறுகிறார்கள்''.

பிறருக்குத் தீங்கிழைப்பது துரோகமெனப்படும். சொல்லாலும் செயலாலும் பிறருக்குத் தீங்கிழைப்பது மாத்திரம் துரோகமன்று: மனத்தால் தீங்கு செய்யலாம் என்று எண்ணினாலே அதுவும் துரோகம்தான் என்று மகா பாரதம் கூறுகின்றது. ''மறந்தும் பிறன்கேடு சூழற்க'' என்பது திருவள்ளுவர் வாக்கு: அவ்வாறு இருக்க உலகைப் படைத்தும் காத்தும் தன்னிடம் இலயமாக்கிக்கொண்டுள்ள பரமேசுவரனுக்குத் துரோகம் செய்யலாமா?, அச்செயல் மிகப்பெரிய பாதகம் என்று ஸ்காந்தம் கூறுகிறது,

பரமேசுவரன், ஈசுவரி, விநாயகர், முருகன், குரு, சிவபக்தர்கள் என்னும் அறுவர்க்குப்புரியும் துரோகங்கள் பெரும் பாபச்செயலாகும். இவத்துரோகங்கள் என்ன என்ன என்று ஒவ்வொன்றாக ஸ்காந்தம் கூறுகிறது: சிவனுடைய தனம் தான்யம், அபிஷேகத்திற்கும் தீபத்திற்கும் பயன்பட வேண்டிய எண்ணெய்: அவனது ஆடைகள், ஆபரணங்கள், அவனது ஆலயம், நிலம், திருக்கோயிலில் உள்ள மரங்கள், நந்தவனத்திலுள்ள பூக்கள் இவைகளையெல்லாம் நாம் பயன்படுத்திக்கொண்டால் அது சிவத்துரோகமாகும் என்று ஒவ்வொன்றையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றது ஸ்காந்தம்'

அதுமட்டுமல்ல இப்பாவச்செயல்களை ஒருவர் செய்யுங்கால் அதைப் பார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கொண்டு நமக்கேன்? என்று அதைக் கவனியாததுபோல் இருந்தாலும் பாவம்தான் என்று கூறப்படுகின்றது.

"சிவன் சொத்துக் குலநாசம்" என்று நம்பெரியோர்கள்சொல்லக்கேட்டிருக்கிறோம். திருக்கோயில்களிலுள்ள பூக்களை எடுத்துவந்து வீட்டிலுள்ள பூஜாமூர்த்திகளுக்கு அர்ச்சிப்பதும் குற்றம் என்று சான்றோர்கள் அவைகளை எடுத்து வரமாட்டார்கள்.

விபூதி, உருத்திராக்ஷம், சிவாகமங்கள் சிவபுராணங்கள் இவைகளைக் குறைகூறுதலும் சிவத்துரோகந்தான். இத்தீய செயல்கள் இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தை விளைவிக்கும் என்று அழுத்தமாகக் கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டாகச் சில வரலாறுகளையும் அது கூறுகிறது.

கீலகன் என்ற வங்கநாட்டரசன் சிறந்த சிவபக்தன். அவன் சிவராத்திரியன்று கோகர்ண க்ஷேத்திரத்தில் சிவதரிசனம் செய்யவேண்டும் என்று அங்குச் சென்றான். திரும்பிவரப் பலமாதங்கள் ஆயின. அவனது நான்கு குமாரர்களுள் வீரஜித் என்பவன் திருக்கோயிலிலிருந்து இருநூறு செங்கற்களை எடுத்துவரச் செய்து சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்திக்கொண்டான். கற்களை எடுத்த வேலையாட்களைச் சிவபக்தர்கள் சிலர் இது தகாத செயல் என்றுகூறித் தடுத்தனர். ஆலயம் அரசனுக்குரியது. அவன் அக்கற்களை எடுத்துக்கொண்டால் தவறு ஒன்றுமில்லை என்று அவனது பணியாட்கள் கூறி அவைகளை எடுத்துச்சென்றனர்.

அவ்வரசனின் மற்றொரு புதல்வன் கோரஜித் என்பவன் திருக்கோயிலுக்குச் சொந்தமான ஒரு பெரிய மாமரத்தை வெட்டி வீழ்த்தி யாகசாலை ஒன்றை நிர்மாணித்தான். யாகசாலைக்குத்தானே அம்மரம் பயன்படுகிறது. அதில் என்ன குறை என்று அவனது வாதம். ஆனால் அதுவும் துரோகந்தான். அதை அத்திருக்கோயிலுக்கே பயன்படுத்தியிருந்தால் தோஷமாகாது.

சூரஜித் எனும் மற்றொரு புதல்வன் திருக்கோயில் நந்தவனத்திலிருந்து பூக்களைக் கொண்டுவரச்செய்து அவைகளைத் தான் அணிவதற்கும் தனது மனைவி அணிவதற்கும் பயன்படுத்திக்கொண்டான்.

இவ்வாறு மூவரும் மூன்றுவிதமான பாவச்செயல்களைச் செய்தனர். இப்பாவச் செயல்களைப் புரியவேண்டாம் என்று சில சிவபக்தர்கள் கூறிய அறிவுரைக்கும் அவர்கள் செவிசாய்க்கவில்லை. மூன்று சிவபக்தர்கள் இத்தீய செயல்களைக் காணச் சகியாமல் உயிர்நீத்தனர்.

அரசன் கீலகன் நாடுதிரும்பினான். திருக்கோயிலுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளால் துயரங்கொண்ட சில சிவபக்தர்கள் அரசனிடம் அவனது புதல்வர்களின் தீச்செயல்களை எடுத்துரைத்தனர். மூன்று சிவபக்தர்கள் உயிர்நீத்த விதத்தையும் கூறினர், அதுகேட்டு அரசன் பெருந்துயருற்றான். தனது புதல்வர்கள் சிவாபராதம் செய்துவிட்டார்களே என்று மிகவும் வருந்தினான். அவனது துயரம் பெருங்கோபமாக மாறிற்று. தன் புதல்வர்களுக்கும் அவனது பணியாட்களுக்கும் கடுந்தண்டனையளித்தான். தன்பொருளைக்கொண்டு அத்திருக்கோயிலைப் புதுப்பித்தான். பல புதிய அணிகலன்களை ஈசனுக்கு அணிவித்தான். பல மரங்களை வளர்க்கச்செய்தான். புதல்வர்கள் செய்த அநீதிக்கு இச்செயல்களைப் பிராயச்சித்தமாகக் கருதினான்.

ஆனால் தம் புதல்வர்களின் செயல்காரணமாக மூன்று மகா சிவபக்தர்கள் உயிர்துறந்துள்ளனரே; அதற்குப் பிராயச்சித்தமாக உயிர்த்தியாகம் செய்யவேண்டும் என்று முடிவுகொண்டான். அவன் மனைவியும் அவனது நான்காவது குமாரன் பாபுஜித் என்பவனும் அரசனது முடிவை ஏற்றுக்கொண்டனர். மூவரும் கைகோத்துக்கொண்டு தீயில் குதித்தனர். ஆனால் சிவனது அருளால் அத்தீ தண்ணீர்போல் குளிர்ந்தது. அவர்களது உடல்கள் மிக அழகோடு விளங்கின. தேவர்கள் பூமாரிபொழிந்தனர். வானத்தில் வாத்தியகோஷங்கள் முழங்கின. இடபாரூடராகப் பரமேசுவரன் அம் மூவருக்கும் காட்சிகொடுத்தனர். நீண்டகாலம் பூவுலகில் அரசாட்சிபுரிந்துகொண்டு இம்மனைவியுடனும் இந்த நல்ல புதல்வனுடனும் சகல இன்பத்தையும் அனுபவித்துவிட்டு மறுமையில் என்னுடைய பதமாகிய கைலையை அடைவாயாக' என்று ஈசுவரன் அருளிமறைந்தார்.

அக்காலத்தில் இவ்வித சிவத்துரோகங்களைச் சிலரே செய்ததாக ஸ்காந்தம் கூறுகிறது. தற்காலத்தில் இவ்வித துரோகங்கள் ஆங்காங்கு நடப்பதை நாம் அறிவோம். இத்துரோகங்களுக்குக் காமக்குரோதங்கள்தான் காரணம், ஸ்காந்தத்தில் கூறியிருப்பதை நாம் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டால் காமக்குரோதங்களுக்கு இடங்கொடுக்காமல் நம் மனத்தைத் தூய்மையாக்கிக் கொள்ளலாம். தீயசெயல்களைச் செய்வதில் அச்சம் ஏற்படலாம்.

(ஆசிரியர் குறிப்பு)

இவை பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளால் கூறப்பட்டவை என கொழும்புத்துறையைச் சேர்ந்த காணி மாவட்ட அதிகாரி செ. துரைராசாசிங்கத்தினால் தீபத்தில் பிரசுரமாகும்படி அனுப்பப்பட்டது. இவைகள் காந்தபுராணத்தில் உபதேச காண்டத்தில் காணப்பெறுவன.

இதனை திருக்கேதீச்சரம் கோணேச்சரம் முதலிய சிவாலய நிர்வாகிகள் நன்கு விளங்கி நடப்பரெனின் அவர்க்கு நன்று.

பொதுவாக எல்லா ஆலய நிர்வாகமும் இதனை நன்கு உணர வேண்டும். பொது மக்களும் உணர வேண்டும். பிராமணர்களும் உணர வேண்டும். பல குடும்பங்கள் கோயில் சொத்தைத் திருடி உண்டவர்கள் மிகு ஈன நிலையடைந்து தமது நலம் யாவும் கெட்டதை இன்று பல இடமும் காணலாம்.

# ஈராண்டு காலத்தில் சந்திரதீபம் என் செய்தது

சந்திரதீபப் பத்திரிகையின் ஆசிரியர் திரு வை நல்லையா அவர்கள் இப்பத்திரிகை மூலம் பின்வரும் அரிய சாதனைகளை புரிந்துள்ளார் எனச் சைவ சமயப் பற்று மிருந்திப் பாடாக இருக்கும் காரணத்தால் அடியேன் சிவனடியார் சமூகத்துக்கு மிகவும் பணிவாக வெளிப்படுத்துகின்றேன்.

தேவார திருவாசகப் பாடல்கள் பெற்ற சிவஸ்தலங்களின் தகைமைக்கு எமது ஈழச்சைவஸ்தலங்கள் இப்போ தகைமை பெறவில்லை. ஆகவே வேதாகம முறைப்படி எங்கள் சிவஸ்தலங்கள் விளங்கத் தீபத்திற்காட்டியவும் திருமுறைகளிற் காட்டியவுமான பக்திமுறைகளும் ஒழுங்குகளும் சிறக்க நாம் பாடுபடவேண்டுமென்பது. அவ்வாறு சிறப்புறின் அற்புதங்கள் செய்து காட்டிய நாயன் மார்களின் வழித்தோன்றல்கள் நமது நாட்டிலும் தோன்றுவர் என்பது.

நீதியால் வாழமாட்டேன் நித்தலும் தூயேனல்லேன் என்ற அப்பர் வாக்குக்கிணங்க மற்றையோரின் குறைபாடுகளைக் காண விழையாது ஒவ்வொரு சைவமகனும் தன்னிடத்துள்ள குறைபாடுகள் அநேகமுள. அவற்றை நீக்க முயல்வதே சமயக் கொள்கை என்பதை இத்தீபங்கள் வெளிப்படுத்துகின்றன,

ஆலயங்களிலுள்ள மின்சார தீபங்களும் ஒலிபெருக்கிகளும் அடியார்கள் பக்தி பரவச மடையவிடாது தடுப்பதுடன் பிரபஞ்சத்தில் மேலும் ஆழ்த்திப் பல பிறப்புக்களுக்கும் வித்திடப்படுகின்றதே என்பது,

பெருந்தொகை மக்கள் சமுகமளிப்பது விழாக்களில் சிறப்பல்ல. பெருந்தொகையான மக்களையும் முத்திநெறியிற் செலுத்தும் வகையில் திருவிழாக்கள் அமைய வேண்டுமென்பது தீபத்தின் வேணவா.

ஒத்தனவொத்தன சொல்லிட ஊரூர் திரிந் தெவருந் தத்த மனத்தன பேச எஞ்ஞான்று கொல் சாவதுவே என்ற மணிவாசகர் கொள்கைக்கேற்பக் கண்டனக் குரல்கள் தீபத்தில் எழுப்பப் படினும் ஆணவமலம் சாதற்கும் சுடச் சுடரும் பொன் போலொளி விடுதற்கும் தீபம் ஒளி காலுகின்றது.

நில்லாதனவாய கல்வி செல்வம் புகழ் வீரம் என்பனவற்றை நிலையின என்று என்றும் ஞானம் நிறைந்த சிவனடியார்கள் மயங்கக் கூடாதென்பதை ஆங்காங்கே காட்டப்படும் தீபத்தின் மேற்கோள்கள் புலப்படுத்து கின்றன,

மாதந்தோறும் வெளிவரும் சந்திரதீபம் சமயகுரவர்கள் பாடிய திருப்பதிகங்களைத் தாங்கி வருதலின் அநேக சைவ அடியார்கள் அவற்றை மனனஞ் செய்யவும் பொருள் விளங்கிக் கொள்ளவும் தமது வாழ்வைப் பக்குவ நிலையில் அமைப்பதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

அந்தணாளர்கள் பண்டைய தில்லை மூவாயிரவர் போன்ற அந்தணர்களாதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. ஏனைய அடியார்களும் தீபத்தின் பிரகாசத்தால் அழகிய தண்ணளியுடைய அந்தணர்களாவாரென நம்புவோமாக'

யோக சாமியவர்களின் ஞான வாக்கியங்கள் பலவற்றைத் தீபமூலம் அறியவும் அவற்றைக் கடைப்பிடித்து வாழ்வைச் சிறப்பிக்கவும் அடியார்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

சிவதொண்டன் முதலான சைவநிலையப் பெரியார்கள் தீபத்துக்குப் போதிய பேராதரவு கொடுப்பின் அநந்த கோடி சந்திரப் பிரகாசத்தைக் கொடுத்துத் தீபம் அஞ்ஞான இருளைப் போக்கிப் பரசமயத்தினரும் சைவசமய போதனைகளை உணரச் சந்தர்ப்ப மேற்படுமென்பதையும் நம்பிக்கை பூண இடமுண்டு.

மேற்கூறிய காரணங்களிலும் பத்திரிகாசிரியரிடங்களிலும் குற்றங்காணின் அவற்றை நீக்கிக் குணங்களை ஏற்றுக் கொள்ளுமாறு வாசகநேயர்களைச் சைவசமயத்தின் பேரால் பணிவுடன் வேண்டுகின்றேன்.

பாவத்தைத் தேய்க்கும் பரிசதனைச் சந்திர தீபத்தாற் தேடிக் கொளல்.

இங்ஙனம்

இ. இராசலிங்கம் இளைப்பாறிய பாடசாலை அதிபர் இணுவில்

# இவர்கள் கையால் திருநீறு வாங்கலாமா?

ஆசிரியர் ஐயா அவர்கட்கு
சந்திர தீபம்

நயினை ஸ்ரீ நாகபூசனி அம்மன் கோவில் உற்சவகாலத்தில் நடை பெற்ற சம்பவம்!

அன்று தேர்திருவிழாவிற்கு முந்திய நாளாகிய சப்பறத் திருநாள். பக்தர்கள் திரள் திரளாக வந்த வண்ணமாகவே இருந்தார்கள். அடியார்கள் அம்பாளுக்கு அர்ச்சனை செய்வதற்காக மண்டப வாசல்களில் முண்டியடித்துச் கொண்டு பொறுமை இழந்தவர்களாகக் காணப்பட்டார்கள். நானும் ஓர் அடியாளராகப் போய் சேர்ந்து கொண்டேன். அடியார்கள் நெருக்கம் கூடிக்கொண்டேதான் இருந்தது தவிர அர்ச்சனை நடைபெறவில்லை. அப்போது எனது அருகில் நின்ற அடியார் ஒருவரை வினவினேன். அவர் சொன்ன பதில் என்னை நிலைகுலையச் செய்தது. அர்ச்சகர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளார்கள் என்றும் இதற்கு அதே ஊரைக் கொண்டு வயிறு வளர்த்து பூநூல் தரித்த பிரதிஸ்டாரத்தினம் தான் தலைமை தாங்குகின்றார் என்றும் சொன்னார். நான் உடனே எனது அர்ச்சனை தட்டில் இருந்த தேங்காயை எடுத்து அம்பாள் சன்னிதானத்தில் அடித்துவிட்டு மற்றைய பொருட்களையும் பகிர்ந்து கொடுத்து விட்டு அம்பாளையும் வழிபட்டுக் கொண்டு வெளியில் வந்தேன், அண்டசராசரங்கள் அனைத்தையும் காத்து அருள்பாலிக்கும் அன்னை பராசக்திக்கே பூப்போட மாட்டோம் என்று நின்ற பிராமணர்களிடம் எப்படித் திருநீறு வாங்கிப் பூசுவது? இந்நிலை நீடிக்குமானால் இவர்கள் கதிதான் என்ன? இதைப் போன்ற நிலைகள் எனிமேலும் நடைபெறாமல் இருக்க ஆசிரியர் வழிவகுக்கவும். நன்றி

இப்படிக்கு

அன்னை அடியான் த- விஷ்ணுகாந்புங்குடுதீவு --3

# சரஸ்வதி பூசையில் வீச்சுரொட்டி

மானிப்பாய்இந்துக்கல்லூரிமாணவர்சரஸ்வதி பூசைக்கு யாழ்ப்பாண மாநகர ஐந்து சந்திக் கடையில் நின்றும் வீச்சு ரொட்டி வாங்கிப் படைத்தனர். அதன்பயனாக 8மாணவரை இடைநீக்கம் செய்து பின்னர் திரும்ப எடுத்தாய்விட்டது. இம் மாணவரில் சிலர் வேறு கல்லூரியின் உப அதிபரின் பிள்ளைகளாவர். மானிப்பாய் இந்துக் கல்லூரியல்ல இன்னும் பல கல்லூரிகளிலும் நவராத்திரி வழிபாடு நோன்பிற்குரிய நோன்மையிராது தமாஷாக நடைபெற்றன. நாம் அறிவோம். இந்த நிலையில் நவராத்திரி விழா நடைபெறுவது மாணவர் செலவில் ஆசிரியரும் அவர் நண்பரும் வயிறார சாப்படுவதே பயனாகின்றது.

இப் பத்திரிகை கொக்குவில் மேற்கிலிருக்கும் திரு. வை. நல்லையா அவர்களால் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேதைத் தொழில் புரியும் பிராமணரே நம்முடன் கோபியாது உங்கள்பழி பெருக்கும் மனத்துடன் கோபியுங்கள். சிந்தையில் அழுக்கைமாற்றுங்கள்.

நாம் சந்திரதீபத்தில் உம்முடன்கொண்ட கோபத்தாலோ அன்றி வெறுப்பாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ நாம் உம்முடைய தவறுகளைச் சுட்டிக் காண்பிப்பது என நீர் தயவுசெய்து நினைக்கவேண்டாம். எமது சமயம் உயர்ந்து வாழவேண்டும் எனில் மூன்று பொருள் சிறந்து வாழவேண்டும்: அவைதான் அந்தணர் பசுக்கள் தேவர்கள் என்பதாகும். இந்த மூன்று பொருள்களில் முதற்கண் விளங்குவர் அந்தணர்கள், அந்தணர்கள் என்ற பதத்தின் ஒவ்வொரு எழுத்தையும் உணரப்போனால் அது வேதத்தின் வழியாகி வேதத்தின் எல்லைப்பொருளைக் குறிப்பது'

ஆகையால் வேதநெறிக்குரியவர்களே அந்தணர். இவர்களிடம் மிலேச்ச நெறி எக்காரணம்கொண்டும் வரக்கூடாது. அப்படி அது வருவதாயின் அதை அக்குலத்து உள்ள தீங்கு என்றே நாம் கருதவேண்டும்: இதை முறப்பக்கத்துத் தந்த தேவாரப் பதிகத்து நன்கு காணுங்கள்.

'' தீது அமரா அந்தணர்கள் என்றும், தீதில்லா அந்தணர்கள் என்றும், தீ ஓம்பும் அந்தணர்கள் என்றும் '' சிறப்புப்படச் சொல்லி உள்ளார் ஞான சம்பந்தர்.

இதுமட்டன்றித் தமிழ்வேதம் எனப் பெரியோர்கொள்ளும் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் இருமூன்றாக இயல்பில் அமைந்த ஆறுதொழிலில் வழுவாது தந்தைவழி தாய்வழியில் பல சந்ததியில் தீங்குவராத முதுமையின் சிறப்புடைய குடியில் பிறந்து என்பதை ''இருமூன்று எய்திய இயல்பின் வழாது இருவர் சுட்டிய பல்வேறு தொல்குடி '' என அதற்கு உரைகாண வந்த நச்சினார்க்கினியர், தாய்வழியும் தந்தைவழியும் வேதநெறி தவறாத ஒழுக்கத்தில் நிலைநின்று ஏதும் ஓர் தவறு – அன்றி தீங்கு நடைபெறாத பழங்குடி என உரைக்கின்றார்:

நச்சினார்க்கினியரும் ஓர் அந்தணர்; ஞானசம்பந்தரும் ஓர் அந்தணர்; சரி இவர்கள் அந்தணராயின் இன்றுள்ள அந்தணர்கள் இவரை மதியாமல் போவது எக்காரணம்.? இவர்களை மதிப்பதாயின் இன்றுள்ள பிராமணர் வேதநெறி தவறுவதேன்? அதற்கு முதல் நீவிர் பதில் தாருங்கள்.

அடுத்து நாய் இருக்கின்றது. அதற்கு ஒரு கருவாட்டுத்துண்டை ஒரு சர்க்கரைக்கட்டியைக் காட்டினால் அது தனக்கு விரோதியானவரையும் தொடரும். அதுபோன்று இன்று பல அந்தணர் வேதநெறியினைக் கைவிட்டு மிலேச்ச நெறியுடையவராகி கண் இழந்தவர்போன்று கால்சட்டை சப்பாத்து கிப்சிஸ்ரைலில் சிலிப்பாத் தலை மணிக்கூட்டுக் கங்கணம் முதல் பலவும் கொண்டு முற்றிலும் மிலேச்சநெறிக்குடைந்தையாகி நிற்கிறார். இவர்கள் பேராசிரியர் தொடக்கம் கந்தோர்ப் பியூன்வரையும் உள்ளனர். இதுமட்டன்றி இவர் தமிழர்விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து அம்பட்டத்தொழிலும் செய்கிறார்; கக்கூசும் எடுப்பார். அருந்ததியதுகள் வீட்டிலும் உண்பார். அதைப்பற்றி நமக்கொன்றும் பழுதில்லை. ஆனால் அதில்போன உங்கட்கே பழுது எனச் சொல்வேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் தொடர்புடையது. அதற்கும் சமய நெறிக்கும் எட்டுணையேனும் பொருந்தாது. அதற்குள் நீங்கள் சென்று கலந்து ஏன் உங்கள் அருமந்த வேதநெறியைப் பழுதாக்குவான்? எந்த ஒரு அரசியல் கட்சியும் தமக்கு ஓர் வாய்ப்புவரின் எத்தனை தரம் நீதிக்கு மாறான செயலைச் செய்யலாமோ அத்தனையும் செய்யத் தயாராக உள்ளது. எத்தனை கொலை எத்தனை பொய்கள் எத்தனை வஞ்சம் எத்தனை ஏமாற்று இவ்வளவும் செய்யச் சித்தமாக இருக்கிறது; இது உங்களுக்கு விளங்காதோ?

இப்படியான ஒரு பாதகநிலையில் நீங்கள் இருந்துகொண்டால் பின்னர் நீங்கள் சமயநெறியில் புனிதமுடையோர் எனச்சொல்லிக்கொண்டு ஒருவர்க்குக் குருவாக அல்லது ஆசாரியாராக அல்லது வழிகாட்டியாக அமையலாமோ? அப்படிச்செய்து யாரையும் நீர் ஈடேற்றலாமோ? உண்மையில் இந்தவகையான செயல் தீதோ இல்லையோ!

சமயநெறியாளர்க்கு எந்த அரசியலும் ஆகாது. அரசியலில் கலப்பார் சமயநெறியில் பங்குகொள்ள முடியாது. அரசசேவையில் கூடச் சமயநெறியாளர் இருக்கக்கூடாது. ஆனால் அரசாங்கத்திற்குச் சில நற்கருத்துக்களைத் தெரிவித்து தீங்கிலாவகை உலகமக்களை ஆண்டிட உதவியாக இருக்கலாம். இதுவேறு கட்சியில்–சேவையில் கலப்பது வேறு என்பதை நீங்கள் விளங்க மாட்டீரோ?

அந்தணர் உயர்வு அளப்பரியது என நாம் பல முறை எம் தீபத்தில் காட்டினோம். அதை உங்களால் விளங்கி உங்கள் உயர்வை நீங்கள் மதியாது பதில் கேவலம் நிறைந்த அரச சேவகத்திலும் அரசியலிலும் கலந்து உம் உயர்வை நீர் பழுதாக்கலாமா? குப்பைத்தொட்டிக்குள் போட்டாலும் குப்பைத் தொட்டியும் பழுதாகும் படியான பத்திரிகைகளில் உம் புகைப்படம் வருதற்காக வேண்டி அல்லது கசாப்புக் கடை போல் கலியாணம் காதல் பாட்டு வீண் பிதற்றல் இவையே பொருள் எனக் கொள்ளும் வானொலியில் உங்கள் பேர் மந்திரம் ஓதும் சிறப்பு இவைகட்காக உங்கள் நெறிகளைப் பழுதாக்கலாமா?

சம்பந்தர் பெருமான் இறைவனைப் பாடிடும் போது நல்லர் ஆற்றவும் ஞான நன்கு உடையவர் என்கின்றார். இது திருக்கேதீச்சரக் கடவுளைச் சொன்னாலும் இன்று அதை அங்கு திருப்பணிச்சபை நடந்துகொள்ளும் நட்டா முட்டித்தனத்தில் காணமுடியாதிருந்தாலும் கடவுள் என்றும் நல்லவரே நல்லவர். என்றும் ஞானம் உடையர், அதற்கு எட்டுணையும் ஐயம் இல்லை. அப்படியான கடவுளுடைய சேவை செய்யும் உயர்வு பெற்ற உங்களிடத்து என்ன என்ன நன்மைகள் காண வேண்டும்? தயவு செய்து உங்கள் நெஞ்சிடத்தாக உங்கள் கையை வைத்து நான் இன்று இருக்கின்ற நிலையில் தானா உண்மை இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்.

நீங்கள் எப்படி நடந்தாலும் எனக்கு ஏதும் நட்டம் போவதில்லை; நமது சமயநெறி தாழ்வுற்றாலும் நமக்கு பழுதாவதொன்றுமில்லை: உலக மக்கள் முத்தி நெறியை உணராமல் போனாலும் நமக்குத் துயரமில்லை. ஆனால் இத்தகைய பெரு நெறி உடைய சமயம் தாழ்வுற்றுப் போக வியாபாரமாகிட அதைப்பார்த்திருக்க மன மில்லை. நாம் சொல்ல வேண்டியதைச் சொல்கின்றோம். தப்பாக ஒன்றுமே சொல்லவில்லை. எனது நெஞ்சத்திடத்து தீமை குடி கொண்டால் அல்லவோ நாம் தவறு சொல்ல வேண்டும்,

நமது நெஞ்சில் தீமை குடி கொண்டால் காதல் கதைகளை கற்பனைக் கதைகளை போக்கிலிப் பிரசங்கியளை நேர்மையற்ற பாதகச் சுவாமிகளை கற்பு நெறி தவறிய பெண்களை ஒழுக்கக் கேடு மிகுந்த அந்தணரை எல்லாரும் மிக நல்லவர் என எழுதலாம். இருட்டுச்சந்தை வியாபாரத்தால் ஏராளம் பணம் படைத்த சவுக்காரம் பீடி கஞ்சா அவின் சாராய வியாபாரிகளை இவர் பெரியசாமி என்று ஏமது பத்திரிகையில் முகப்புப் படம் போட்டு அவர் பணத்தை வாங்கி நாம் நல்ல குசாலாக வாழ்க்கை நடத்திடலாம்? ஆனால் பஞ்சமா பாதகரிலும் மிஞ்சிய சவுக்காரம் உப்பு வீடி வட்டி இரும்பு பொன் வியாபாரிகளின் பணத்திற்கு நாம் ஆசைப்படவில்லை. அல்லது இந்த பாதகர்களின் பொருள் வந்தால் நமது பத்திரிகைப் பணி உடன் நின்றிடும்: அதை நீங்கள் உணருங்கள், நீங்கள் ஆகமங்களை நன்கு விளங்கினால் ஓர் கோயில் கட்டுவதற்கு பொருள் சேகரிப்பதற்கு ஈனம் இலாத வழி வந்த பொருள் தான் பாவிக்கப்பட வேண்டும் என கூறப்படுகின்றது என்பது தெரியுமா?

இன்று பல பேதைப் பிராமணர்கள் உத்தமமான தமது நெறியைக் கைவிட்டு தீங்கான உள்ளமுடன் கும்பாபிஷேகங்கள் செய்கின்றார்; செய்யத்தகாத செயல்களை செய்யலாம் என்று மிகு மோசமான வழி பொய்மைக்கே இடமளிக்கின்றார். புங்குடுதீவில் நடந்த கும்பாபிஷேகம் இதற்கு தக்க எடுத்துக்காட்டு: அங்கு பெருவாரி பணம் படைத்துக் கொண்ட வியாபாரிகள் அந்தக் கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள்: அந்த கும்பாபிஷேகத்தில் 50க்கும் மேற்பட்ட ஓம குண்டங்கள் இடம் பெற்றன என்றால் எவ்வளவு பணம் செலவாகி இருக்கும் என்பதை உணருங்கள்:

இந்த கும்பாபிஷேகத்தைப் பற்றி இது தகாத செயல் வேத நெறிக்கு பொருத்தமற்றது என என் பத்திரிகையில் உண்மை நிலையை விளக்கி காண்பித்தோம்: இதை நல்ல நெஞ்சம் படைத்த அந்தணர்கள் ஏற்றனர். அதில் ஒருவர் மாவிட்டபுரம் குருக்கள். இவர் ஒரு முறை அக்கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட ஓர் சாத்திரி இணுவிலைச் சேர்ந்தவரைக் கண்டார். கண்டபோது அந்தச் சாத்திரியிடம் என்ன நீங்கள் 33 குண்டத்தில் ஊதுறியள் என சந்திரதீபம் எழுதுறார். அவர் சொல்வது சரி. நீங்கள் எவ்வாறு 33 குண்டங்களில் 2 நாளில் யாக பூசை மூடிக்கலாம். அக்கினி ஒன்று: அதை ஒவ்வொரு குண்டத்திலும் ஆவாகனம் செய்து பின்னர் தணித்து மறு குண்டம் சேர்த்து தணித்ததற்கு பிராயச் சித்தம் செய்து இப்படி ஒழுங்காக யாக பூசை செய்வதாயின் ஆறு ஏழு நாட்கள் பிடித்திடும். ஏன் அப்படி ஏமாற்றுகிறியள் என்று பேசவும் இணுவில் சாத்திரி என்ன பதில் சொன்னார் தெரியுமா? அண்ணை தீவுப்பகுதி வியாபாரிமார்களிடத்து ஏராளமான பணம் உண்டு. அவர்கட்கு விசயம் தெரியாது. அவர்களைக் கொண்டு செலவு செய்யப் பண்ணுவதற்கு வேறு என்ன வழி? அவர்கள் கிட்டத்தட்ட 75 பிராமணர்க்கு கொடுத்த தெட்சணை எவ்வளவு தெரியுமா? வாங்கக் கூடிய இடத்தில் வாங்காமல் ஏன் விடுவான்? இங்கு ஆரும் ஒருத்தர் அப்படி தருவாரா? ஒரு குருக்களுக்கு 300 ரூபாவிற்கு மேல் செலவு தள்ளி குரு தெட்சணை. அதை நீர் உணரும் என்றாராம் அந்த இணுவில் சாத்திரி. அப்போது மாவிட்டபுரம் குருக்கள் சொன்னாராம் உங்கள் மன எண்ணம் உப்படியாய் இருந்தால் சந்திர தீபம் காசுக்கு நீர் அடுப்பூதிறியள் என்று சொல்வது சரிதானே என்றாராம். அதைக் கேட்ட சாத்திரி பதில் சொல்லமுடியாது சந்திரதீபக் காறன் அவன் விசரனை விட்டு அவனுக்கு நல்ல பாடம் படிப்பிக்க ஆள் இல்லை: அவனுக்கு வாஸ்து சாந்தி செய்யவேண்டும் எனக் கூறிவிட்டு தனது புடு புடு மோட்டர் சயிக்கிளில் பிரயாணப்பட்டாராம்.

இந்த இணுவில் சாத்திரி இன்று எத்தனை கும்பாபிஷேகம் நடத்தி இருப்பார்? இவர் சிந்தையில் தீங்கு குடி கொள்ளவில்லையோ தயவு செய்து பதில் சொல்லுங்கள். இன்று இந்த சாத்திரி இனி என் சொல்வார் ஒன்றில் தான் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்லலாம். அல்லது மாவிட்டபுரம் குருக்களிடம் போய் ஏன் சொன்னீர் எனக் கோவிக்கலாம். அல்லது வேறு தீங்குடைய வழிகளைக் கையாளலாம்.

இன்று நமது பிராமணர் பலர் செல்கின்ற தவறான வழிகளை சுட்டிக் காண்பிப்பது என்றால் அது இந்த ஒரு பத்திரிகையில் அடங்காது. முன்னர் காலத்து நமது பெரியோர்கள் பெருமையுடன் நடந்து பெருமையான செயலைச் செய்து வாழ்க்கை நடத்தினர். வயிற்றுப் பசியிலும் பார்க்க தமது ஒழுக்கத்தையே மிகவும் கண்ணியமாகப் பேணினர். அதனாலே தமது நல் ஒழுக்கங்களை பேண மாட்டாதாரை தீண்டாதவர்கள் என சொல்லி அவர்கள் செயலை புறக்கணித்து அவர்களை ஒருபுறமாக வைத்தனர்.

அப்படிச் செய்யப்பட்ட சிறு பான்மையினர் தான் ஒலிபெருக்கியிற் அடித்தல் விநோத விண்ணாணங்களில் ஈடுபடுகின்றவர். அவர்கள் மற்றையோருடைய நலன் கருதாது தன் நலமே மிகுந்தவர்: புலால் உண்ணல் முதலிய கொடுமைகள் மிகுந்தவர். இவர்கள் பெரிதும் விரும்பும் மிலேச்சப் பொருள்களை அந்தணர்கள் நீங்களும் விரும்பலாமா? உங்கள் உயர்விற்கு சாந்தம் அவாவின்மை அடக்கம் கபடமிலாமை ஆரவாரமின்மை கடமை உணர்வு இவ்வளவும் இருந்தால் அல்லவோ உங்கள் தருமம் உயர்வாகக் கருதப்படும். உமது குலம் உயர்வுடையது எனலாகும்.

உமது குல ஒழுக்கத்தில் பொருள் பெரிதல்ல குல ஒழுக்கம் தான் பெரிது! இன்று எத்தனை சிறுபான்மை மக்கள் வாகனம் வீடு உத்தியோகச் சிறப்பு இவை எல்லாம் மிகு திறம்படப்பெற்றுள்ளனர். அவர் வீட்டில் ஒரு கலியாணம் ருது சாந்தி வந்தால் எத்தனை எத்தனை நாட்கள் ஒலிபெருக்கி பாவனை. இரவு 2 மணி 3 மணி வரையிலும் நடைபெறும்; பெரும்பாலும் தட்டார மக்களும் இந்த நிலையில் உளர். இவையாவும் உங்கட்கு பொருத்தமாவதா? இல்லவே இல்லை. எதற்காக எனில் நீங்கள் தெய்வநெறிக்கு உரியவராக கருதப்படுதலால் இந்த வகையான ஒலிபெருக்கி வானொலி முதலிய வியப்பிற்குரிய பொருள்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்துவதன்று.

இயந்திர சாதனங்களின் புதுமைகள் உங்கட்கு வியப்பிற்குரியன அன்று. வேதத்தை நன்கு உணர்ந்தோர் வியக்க ஒன்றும் இல்லை என்பர். உங்கள் அந்தணர்கள் என்ற சொல்லின் கருத்தில் வேதத்தின் அந்தமான திருவருள் பெருக்கத்தில் நிலைபெறல் அன்றி ஐந்து பூதங்களின் பரிணமிப்பான இயந்திரங்கள் உங்களது வியற்பிற்குரிய பொருளாக மாற வேண்டியதில்லை என்றபடியால் இவற்றின் மேல் மோகம் உங்கள் உயர்வைக் கெடுக்கும்: என்றதால் ஒலிபெருக்கி வானொலி ஒலிப்பதிவு நாடா சினிமா படக் காட்சி முதல் பலவற்றிலும் நாட்டம் கொள்ளாதீர் என நாம் கருத்துத் தெரிவித்தோம். இதை உங்களின் உயர்வை கருத்தில் கொண்டே தெரிவித்தோம்; நீங்கள் படம் பார்த்தால் வானொலி பாடினால் ஒலிப்பதிவு பெட்டி டெலிவிசன் இவற்றில் அக்கறை கொண்டு நடந்தால் உம் உயர்வு கெடும் அன்றி எனக்கு ஒரு கெடுதலும் இல்லை. நட்டமும் இல்லை.

உமது உயர்வைக் கெடுக்கும் சிறுமையின் செயலை நீங்கள் மேற்கொள்ளல் நன்று அன்று என நாம் கருத்து தெரிவித்ததும் நீர் எமது பத்திரிகை ஓர் விழல் என்றும் நமக்கு பைத்தியம் என்றும் பல முறை எமக்கு கையெழுத்திலாத கடிதம் அனுப்புவதுடன் பலபல இடமும் கூடிக் கூடி என் கதை பேசினீர்; உமது உயர்வைக் கெத்துக் கொள்ளும் நீவிர் பைத்தியக்காரரா அல்லது நாம் பைத்தியகாரனா? தயவு செய்து பதில் தாருங்கள்? ஓர் புத்திசாலி என் செய்வான் தன் உயர்வைத் தான் கெடுப்பானா அப்படிச் செய்வது புத்திசலித்தனம் என்று கருதப்படலாமா?

ஆனதினாலே உண்மையில் நீவிர் உயர்ந்த நெறியை அடைந்தால் ஒழிய நமது சைவநெறியில் தருமம் தவம் இரண்டும் தழைக்காது. இன்று மேடையில் சிவத்தமிழ் கீழ் இறங்கினால் அவத் தமிழ் மேடையில் தூக்கா துரந்தரி கீழ் இறங்கினால் பொய்யரின் சுந்தரி; மேடையில் தம்பிரான் வீட்டில் பனம் பானத்தில் எம்பிரான்: மேடையில் சிவதர்மவள்ளல் வீட்டில் தொழிளாளருடன் வள் வள் துள்ளல். வில் இசையில் தலைதடவி எத்தனை பெண்களின் முலை தடவி? மேடையில் பிரசங்க சுவாமி வீட்டில் பல பெண்கள் காமி கள்ளப் பணம் கொண்டோடும் சாமி. கஞ்சா அவின் காட்டாமல் கொண்டோடவல்ல சாமி; இப்படியாக நமது சமயப் பிரசாரம் நெறி தவறி விட்டது. இந்த உண்மை பலருக்கும் தெரியும்! வெளியில் பேச பயம் வெட்கம். மாட்டிறைச்சி அரைச் செமிப்பாளர் திருப்பணிச் சபையில் தலைப்பாளர்: இப்படியாக நம் சைவ நெறி சீர் கெட்டு தரம் குன்றி நாசம் விளைய இனியும் இதைப் பார்த்திருக்க முடியாது! நமக்கு நாசம் வரினும் தவறுகளை கூசாது சொல்வேன்: வருவது எல்லாம் வரட்டும் வராட்டில் விடட்டும் என்ற கொள்கையில் ஆதியும் அந்தமும் அளப்பரிய நம் சைவ நெறியின் புனிதத்தையும் உயர்வையும் சந்திரதீபப்பத்திரிகை மூலம் சொல்லத்தலைப்பட்டேன்.

சைவ நெறியில் அந்தணர்கள் வேத நெறியின் சீலமுடன் ஒழுகினால் அன்றி ஏதும் நன்மை தலைப்படாது என்று அடியேன் கருதியபடியால் அந்தணர் குலத்தை உயர்த்தவேண்டி அவர் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காண்பித்தேன்! இதை எல்லாம் அறிவு நலன் படைத்த அந்தணர்களும் சரி என ஏற்கின்றனர்; வேத நெறிக்குரிய குல ஒழுக்கங்களில் ஒழுக வேண்டியவர் ஒழுகுபவர் என மக்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள் நம்பி நழுவி என்ற வகை தம் ஒழுக்கம் கெட்டு அதனால் சிறுபான்மையானவரைப் போல் எடுத்ததற்கெல்லாம் சுரீரென நம்முடன் கோபிக்கின்றனர். அவர் என் மீது கோபிப்பதை விடுத்து தம்மை சிறு நெறிகட்கு ஆளாக்கியோருடனும் சிறு நெறிக்கு ஆசையுற்ற தத்தமது மனத்துடனும் கோபித்துக் கொள்ளட்டும்.

மீண்டும் சொல்கிறேன் சந்திர தீபம் சிவனருளால் தோன்றியது. அது உங்கள் குலத்தை உயர்த்தவே தோன்றியது: தாழ்த்தவன்று: இது காலவரையும் தோன்றிய சமயப்பத்திரிகைகள் உங்கள் குலநெறிகள் தலைதடுமாறவும் தாம் தாம் சுயநலத்தால் பயத்தால் இதுபற்றி ஒரு பேச்சு தம் பத்திரிகைகளில் குறிப்பிடவில்லை. அதுவுமின்றி நம் நாட்டில் காணப்பெறும் சமயப் பத்திரிகை ஆசிரியர்கள் பலர் சைவ சீலங்கள் பற்றி விளக்கமில்லாதவர். கல்விச் சிறப்புடையரேனும் வைதிக ஒழுக்கமிலாதவர். ஒரு பத்திரிகையின் ஆசிரியர் தனது மனைவி எதிர் வீட்டில் இருப்ப இன்னுமொரு சிங்கப்பூரில் இருக்கும் ஒருவரின் மனைவிக்கு துணையாக குடும்பம் நடத்தியவர், அவர் சமயத்துறைக்கு மரணசாதனம் எழுதும் ஒரு பத்திரிகையின் பிரதம ஆசிரியர். அப்பத்திரிகையினை நடத்தும் சபையின் பொதுக்கூட்டம் ஒன்று மது அருந்திய நிலையில் நடைபெற்றது. அன்றைய தினத்து அங்கத்தவர் பிரயாணம்செய்த கார் ஒன்று சாராயப்போத்தல்களுடன் அரசினரால் கைப்பற்றப்பட்டது. இது தான் எமது சமய சபைகளின்நிலை;

அடுத்து புறச்சமயங்களில் ஈடுபட்டோரும் எமது சமயநெறியில் தலையிட்டு சமரசம்பேசி நமது குல குருமார் எனப்படும் அந்தணர்களது ஒழுக்கங்களைக் கெடுத்துக்கொள்வதற்கு உடந்தையாய் இருந்தனர். இதுவன்றி நம் அரசியல்வாதிகளும் தம் சுயநலத்திற்காக அந்தணர்குல ஒழுக்கம் கெடுவதற்கு வழிகாட்டிகளாக அமைந்தனர்.

இப்படிக் குல ஒழுக்கும்கெட உள்ளத்துத் தீங்கு குடிகொள்ள அந்தணர்கள் நெறிதவறிப் போட்டி பூசல் சண்டை சச்சரவு வழக்கு மதுவுண்டல் இன்னும் பல பாதகங்களைப் புரிவதில் தீவிரமடைந்தனர். கோவில்களில் உள்ள சுவாமிகளை கல்லும் செம்பும் என்றே நினைத்தனர்: அங்கு ஏதோ பத்திமையோ பயமோ இலாது தாம் நினைத்தபடி நடக்கத் தொடங்கினர். தாம் செய்யும் கிரியைகள் பிறர்க்காகச் செய்கிறேன் தமக்காக அன்று என நினைந்தனர்; இதனால் கலியும் தன்விருத்தியைக் காட்டக் கலிக்கு அடிமையாகிக் கலிக்கு ஓர் விருந்தாகிவிட்டனர்;

ஆதலினால் நமக்கு துயர்வரினும் இந்த அந்தணர் வெகுளினும் இந்த அந்தணர்குலம் ஓங்கட்டும் என்ற நல்நினைப்பால் எனது உள்ளத்தில் ஏதும் தீயநோக்கமிலாது உங்கள் தவறுகளைச் சுட்டிக்காண்பித்து நீங்கள் திருந்தி நடந்து என்றும் உயர்வுடன் வாழவேண்டினேன்; இது சத்தியம்; ஆனால் என்னை இன்னமும் நீரும் துன்புறுத்த எத்தனித்தால் அது உங்கட்கே தீங்காக மாறுமன்றி அது எமக்கு தீங்கு வருவியாது என்பதை நினைவுபடுத்துகின்றேன்;

# சந்திரதீபம் சொல்வதை இரு கரம் கூப்பி வரவேற்கிறேன்.

**உ**

சிவஸ்ரீ இலி. கு. சிவஞானச்செல்வம் ஐயர்
அக்கரைப்பற்று,

திரு. நல்லையா அவர்கள்,
ஆசிரியர்' 'சந்திரதீபம்'
அன்புடையீர்,

தாங்களனுப்பிய சந்திர தீபம் மூன்ருவது ஆண்டுமலர் கிடைத்தது நன்றி.

சமயகுருமார் எனக் கூறிக்கொண்டு சமயத்தை விற்றுண்ணும் புல்லுருவிகளாலும் சர்வமத சமரசம்பேசும் மேடைப் பச்சோந்திகளாலும்தான் எம் மதவிருச்சம் பழுதடைந்துவருகிறதென்பதை நான் எப்பொழுதோ அறிந்து கொண்டேன். 1953–ம் ஆண்டிலிருந்து இன்றுவரை இந்த ஆகாச கெருடர்களைத் தட்டிக்கேட்க நினைந்து பட்ட இன்னல்கள் பலப்பல.

சமயம் சீரழிவது யாரால் என்ற உண்மையைச் சந்திரதீபம் நூறுவீதமும் எடுத்துக்காட்டுவதை என் மனமுவந்து இருகரங்கூப்பி வரவேற்கிறேன்: இவர்கள் ஒழுக்கம் ஒருபக்கம் இருக்கட்டும்; செய்யவேண்டிய கிரியைகளையாவது ஒழுங்காகச் செய்கிறார்களா? அதுவும் இல்லை. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று காட்சிகாட்டுகிறார்கள்: கும்பாபிஷேகங்களில் 33 குண்டம், 25 குண்டம், 9 குண்டம் 10 குண்டம் என்று இந்தக்குண்டர்கள் செய்யும் தந்திரவித்தைகள் அளப்பில. புதன்மறைந்து வேட்டுவன் புட்சிகழிந்தது போல் தவமறைந்தல்லவை செய்கிறார்கள். இதை வள்ளுவர் சுட்டிக்காட்டியும் ஆசையுட்பட்டு அவம் செய்கிறார்கள்.

இவர்கள் செய்யும் அட்டூழியங்கள் அநேகம். இதனால் எத்தனையோ ஆலயங்கள் பாழ்கிடக்கின்றன; கிராமங்கள் சீணித்துப்போகின்றன; மக்கள் மதநம்பிக்கை இழக்கின்றனர்; தட்டிக்கேட்கப்போனால் தப்புத்தண்டா செய்கிறார்கள்; சில நல்லவர்கள் தன் பல்லைக்குத்திப் பிறர்க்குக் காட்டுவதா? என்று கண்டிக்கிறார்கள்; விளைவுகள் வேறுவிதமாயமையும் என்கிறார்கள்; எதற்கும் துணிந்துநின்றால் பாமரமக்களைத் தன்பால் ஈர்த்து ஈனச் செயல் புரியவும் முன்வருகிறார்கள்;

அன்புடையீர் தங்கள் பணி தொடரட்டும். என்மனமார்ந்த நல்வாழ்த்துக்கள். 'சந்திரதீபம்' வாழ்க. தங்களைப்போன்ற ஆயிரம் ஆயிரம் நல்லையாக்கள் எங்கள் சைவசமயத்தில் தோன்றவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்: அப்பொழுதுதான் நாடுமுன்னேறும்; சமூகம் முன்னேறும்; சாதிமுன்னேறும்; தமிழ் ஈழநாடு கைவரும்.

இப்படிக்கு
அன்புள்ள சிவஞானச்செல்வம்ஐயர்.

# சந்திரதீபம் சமயக்கட்டுப்பாட்டை காப்பாற்றும் ஓர் கோட்டை

'சந்திரதீபம்' சமயக் கட்டுப்பாடுகளை மறைந்துபோகவிடாது கட்டிக் காப்பாற்றுகின்ற பெருங்கோட்டை. அதைப் போற்றுகின்றவர்கள் இக்காலத்தில் இல்லை. அரசியற் தலைவர்களே தகர்த்தெறிவார்கள். நவநாகரிக முன்னேற்றவாதிகளாகிய அசற் பிராமணோத்தமர்களே தீபத்தைத் திக்கிரையாக்கிவிடுவார்கள்: அவர்களோடு பரிபாலனசபையாரும் சேர்ந்துவிட்டால் தீபம் மட்டுமல்ல அத்தீப ஆசிரியர் நல்லையா அவர்களுக்கே அந்தியக் கிரியை புரிய அரும்பாடுபடுவார்கள். ஆண்டவன்தான் அவரைக் காப்பாற்ற வேண்டும்.

சந்திரதீப ஆசிரியர் ஐயா அவர்களுக்கு ஒன்றை நானும் உங்கள்வாயிலாக நினைவூட்ட விரும்புகின்றேன்; அடுத்துவரும் வெளியீடொன்றில் இதைப் பிரசுரித்து எனக்குமொரு பிரதியனுப்பிவைக்கவும்.

பிராமணோத்தமர்களாகிய பரமாசாரியர்கள் கோவில் கிரியைகளில் ஸ்பீக்கரில் ஒருவர் பத்ததியை வாசிக்க மற்றவர்கள் அர்ச்சனை செய்தல், யாகம்செய்தல், பிரதிட்டை, கும்பாபிடேகம் முதலியவற்றைச் செய்தால் பலனுண்டா? ''பாவனை மந்திரம் பலபடவுரைத்து'' பத்ததி வாசித்துச் செய்யும்போது பரமாசாரியாரின் பாவனையெங்கே? உந்தியிலிருந்து எழ வேண்டிய உற்சாடனமெங்கே? கிரியை எங்கே?

இங்ஙனம்
அன்பன் அரியான்பொய்கை

# பிராமண பிரமச்சாரிகட்கு துடக்கில்லையா?.

பண்ணாகம்

சந்திரதீப ஆசிரியர் அவர்கட்கு
ஐயா

ஆசௌச அனுட்டிப்பு முறை பற்றி ஓர் ஐயம் எழுகின்றது: ஓர் கோயிற் பூசகரின் தாயார் இறந்து இப் பூசகரின் மகன் ஆசௌசத்துடன் சுவாமிக்கு பூசை செய்யலாமா? இப்பிள்ளைக்கு ஆசௌசமில்லையா? தகப்பன் பூசகரைக் கேட்டால் தன் மகன் பிரமசாரியென்றும் இருபிறப்பாளரென்றும் அவருக்கு ஆசௌசமில்லையென்றும் கூறி மழுப்புகிறார்; பிராமணரில் பேத்தியார் இறந்தால் பேரப்பிள்ளைக்கு ஆசௌசமில்லையா? இதனைப்பற்றிய விதிகள் நீங்கள் அறிந்தால் அல்லது விசாரித்து உங்கள் சந்திர தீப மூலம் சந்தேகத்தை தெளிவு படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம் இ. தில்லையம்பலம் முன்னாள் மனேசர் பண்ணாகம்

# நைட்கிளப்பிற்கு தோசையும் பிரேதத்திற்கு பூமாலையும்

ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவில் வீதி அருகில் உள்ள பாடசாலை ஒன்றில் அங்குள்ள சில இளைஞர் கன்னியருடன் நைட்கிளப் நடத்தினார். அதற்கு அக் கோயில் குருக்கள் சம்பலும் தோசையும் கொடுத்தார். ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயில் குருக்கள் அயலில் உள்ள கிறீஸ்தவரின் பிரேதத்திற்கு போட மஞ்சள் பூவில் சரிகை வேலையுடன் ஒரு பூமாலை கட்டிக் கொடுத்து ரூபா 50 பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org